# ජාතික මැණික් සහ ස්වර්ණාභරණ අධිකාරිය
# தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை
# NATIONAL GEM AND JEWELLERY AUTHORITY

## ஆண்டறிக்கை

## ANNUAL REPORT
2022

කර්මාන්ත අමාත්‍යාංශය
கைத்தொழில் அமைச்சு
MINISTRY OF INDUSTRIES

# <u>எமது செயற்பணி</u>

‘‘இலங்கை - நீல மாணிக்கங்களின் மூலதனம்’’

## எமது பிரதான பணி

‘‘ தேசிய செல்வம் மற்றும் நலன்பெறுனர்களின்
மகிழ்ச்சித் தோற்றுவிப்பிற்காக அபிவிருத்தி, மேம்பாடு மற்றும் பிரமாணத்தினூடாக
இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணத் துறையின் சிறப்புத்தன்மையை எய்துதல்’’

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை
## கூட்டமைப்புத் தகவல்

| | |
|---|---|
| **தலைமை அலுவலகம்** | தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை<br>இல. 25, கோல் பேஸ் டெரஸ்,<br>கொழும்பு 03.<br>தொலைபேசி : 011-2329295/2325364/2390645-8<br>தொலைநகல் : 011-2320758<br>**இணையதளம் : www.ngja.gov.lk** |

**பிராந்திய அலுவலகம் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் :**

| | |
|---|---|
| பிராந்திய அலுவலகம்<br>(கொழும்பு) | தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை<br>இல. 25, கோல் பேஸ் டெரஸ், கொழும்பு 03.<br>தொலைபேசி : 0112325364, 2329295, 2390645,2390651<br>**மின்னஞ்சல் : ngjacolr@gov.lk** |
| பிராந்திய அலுவலகம்<br>(இரத்தினபுரி) | தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை,<br>இரத்தினபுரி.<br>தொலைபேசி : 0452223591, 0452222159, 0452223592<br>**மின்னஞ்சல் : srmratnapura@gov.lk** |
| பிராந்திய அலுவலகம்<br>(எஹலியகொட). | தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை,<br>பிராந்திய அலுவலகம், எஹலியகொட<br>தொலைபேசி : 0362258170<br>**மின்னஞ்சல் : ngjaehe@gov.lk** |
| பிராந்திய அலுவலகம் (நாஉல) | தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை,<br>நாஉல.<br>தொலைபேசி : 0662246094<br>**மின்னஞ்சல் : ngjanaula@gov.lk** |
| பிராந்திய அலுவலகம்<br>(மொனறாகல) | தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை,<br>1/17, கச்சேரி வீதி, மொனறாகல.<br>தொலைபேசி : 0552276124<br>**மின்னஞ்சல் : ngjamonr@gov.lk** |
| பிராந்திய அலுவலகம்<br>(மாத்தறை) | தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை,<br>இல. 391, பபுரான, மாத்தறை,<br>தொலைபேசி : 0412223330<br>**மின்னஞ்சல் : ngjamatara@gov.lk** |

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின்**
**சபைப் பணிப்பாளர்கள்**

**ஆண்டு 2022**

| **பெயர்** | | **முதல்** | **வரை** |
|---|---|---|---|
| திரு. விராஜ் டி சில்வா தலைவர், நிறைவேற்று உத்தியோகத்தர், தேசிய இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபை | தலைவர், நிறைவேற்று உத்தியோகத்தர் | 14.10.2022 | இது வரை |
| திரு. வை.கே.ரீ.பீ. வீரசிங்ஹ - தலைவர், நிறைவேற்று உத்தியோகத்தர், தேசிய இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபை | தலைவர், நிறைவேற்று உத்தியோகத்தர் | 30.11.2020 | 13.10.2022 |
| **திரு. டீ.சீ. டபிள்யூ. ஹபுகொட** – மேலதிக பணிப்பாளர் நாயகம், நிதி அமைச்சு | உறுப்பினர் | 01.03.2022 | இது வரை |
| **திரு. சுரேஷ் டி மெல் -** தலைவர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை | உறுப்பினர் | 20.01.2021 | இது வரை |
| **திரு. ஏ.ஆர்.கே.விஜேசேகர** – உதவி ஆளுனர், இலங்கை மத்திய வங்கி | உறுப்பினர் | 2021.09.29 | இது வரை |
| **திரு. என்.ஏ.கே.எல் விஜேநாயக்க** – மேலதிக செயலாளர், இரத்தினக்கல், ஆபரணங்கள் தொடர்பான கைத்தொழில்களின் இராஜாங்க அமைச்சு | உறுப்பினர் | 31.01.2022 | இது வரை |
| **திரு. ஏ. எம். ரத்னாயக்க** – தலைவர், இரத்தினக்கல், ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் | உறுப்பினர் | 28.06.2022 | இது வரை |
| **திரு. பீ.ப்பீ.எஸ்.சீ. நோநிஸ் -** பணிப்பாளர் நாயகம், இலங்கை சுங்கம் | உறுப்பினர் | 23.08.2022 | இது வரை |
| கலாநிதி. ஜீ. சந்திரசேன | உறுப்பினர் | 14.10.2022 | இது வரை |
| திரு. பீ.ஏ.எம். ரஞ்சித்பண்டார | உறுப்பினர் | 14.10.2022 | இது வரை |
| திரு. ஆர்.டபிள்யூ. எட்வின்ராஜபக்ஷ | உறுப்பினர் | 14.10.2022 | இது வரை |
| திரு. சுமதிபால லியனாராச்சி | உறுப்பினர் | 14.10.2022 | இது வரை |
| திரு. குணபால விக்ரமகே | உறுப்பினர் | 25.07.2022 | இது வரை |
| திரு. ஏ.கே.டீ.டீ.டீ. அரந்தர – பணிப்பாளர் , நிதி அமைச்சு | உறுப்பினர் | 23.01.2020 | 04.03.2022 |
| திரு. டபிள்யூ. ஏ. பீ. சுமித் குமார | உறுப்பினர் | 01.01.2020 | 20.10.2022 |
| திரு. என். ஹேமப்பிரிய மல்லிகாரச்சி | உறுப்பினர் | 01.01.2020 | 19.10.2022 |
| திரு. அசங்க விஜயசுந்தர | உறுப்பினர் | 26.02.2020 | 18.10.2022 |
| திரு. எரங்க பசநாயக்க | உறுப்பினர் | 01.01.2020 | 17.10.2022 |
| திரு. ஆர். எம். மோஹான் ரத்னாயக்க | உறுப்பினர் | 25.09.2020 | 29.04.2022 |

**சிரேஷ்ட முகாமைத்துவ விபரம்**
**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை**
**ஆண்டு 2022**

| | **பெயர்** | **கல்வித் தகைமை** | **பதவி** |
|---|---|---|---|
| 1. | திரு. விராஜ் டி சில்வா - | பீ.ஏ. ஹொன். (டெல்லி) | தலைவர், நிறைவேற்று உத்தியோகத்தர் |
| 2. | திரு. பீ.யூ.கே. தேநுவர | எம்பீஎம் பீ.கொம் (ஸ்பெ) எச்.என்.டீ.ஏ, எம்ஏஏரீ | பதில் பணிப்பாளர் நாயகம் |
| 3. | திரு. ரீ.டீ. குலநந்த | பீஎஸ்சீ.(பப்ளிக் அட்மினிஸ்ரேஷன்) | பணிப்பாளர் (அமுலாக்கல் மற்றும் பிராந்திய அபிவிருத்தி) |
| 4. | திருமதி. ஏ.என்.பீ. பெரேரா | எப்சீஏ. எப்எம்ஏஏரீ | பணிப்பாளர் (நிதி) |
| 5. | திரு. பீ.யூ.கே. தேநுவர | எம்பீஎம் பீ.கொம் (ஸ்பெ) எச்.என்.டீ.ஏ, எம்ஏஏரீ | பணிப்பாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) |
| 6. | திரு. ஜீ.டபிள்யூ.அமரசிறி | பீ.எஸ்சீ. ஏன்ஜி (மைனிங்) ஜீஈஎஸ்எல் (ஏஎம்) | பணிப்பாளர் (காணி, அகழ்வு, சுற்றாடல்) |

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழான 2022 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை**

---------------------------------------------------------------------------------------------------

01 2022 ஆம் ஆண்டு தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையின் செயற்பாடுகளின் 28 ஆவது ஆண்டைக் குறிக்கின்றது. மீளாய்வாண்டிற்கான அதன் செயற்பாடுகள் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகம் மற்றும் இரத்தினபுரி, எகலியகொட, மாத்தறை, நாவுல, மொனறாகல, கட்டுநாயக்க பிராந்திய அலகுகளின் மூலமாகவும் கட்டுநாயக்கா இரத்தினக்கல் ஏற்றுமதி நிலையம் மற்றும் உலக வர்த்தக மையத்திலுள்ள இரத்தினக்கல், ஆபரண பரிவர்த்தனை நிலையம் ஆகியவற்றின் மூலமாகவும் நடாத்தப்பட்டுள்ளன.

**02 அதிகார சபையின் பணிகள் :**

(அ) இரத்தினக்கல் கைத்தொழிலையும் ஆபரணக் கைத்தொழிலையும் ஊக்குவித்தலும் அபிவிருத்தி செய்தலும்,

(ஆ) இரத்தினக்கல் கைத்தொழிலையும் ஆபரணக் கைத்தொழிலையும் ஊக்குவிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்குமான திட்டங்களை ஆரம்பித்தலும் நடைமுறைப்படுத்தலும்,

(இ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே இரத்தினக் கற்களுக்கும் ஆபரணங்களுக்குமான சந்தையைப் பயன்படுத்தலும் உலக சந்தையில் அத்தகைய இரத்தினக் கற்களுக்கும் ஆபரணங் களுக்குமான தேவையை ஊக்குவித்தலும்,

(ஈ) இரத்தினக்கல் கைத்தொழில், ஆபரணக் கைத்தொழில் ஆகியவற்றின் தொடர்பிலான சகல அம்சங்கள் மீதும் விசேடமாகச் வெப்பமூட்டற் பதனிடுகை, இரத்தினக்கல் பட்டை தீட்டல் ஆகியவற்றில், இக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஆளணியினர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படுவதை ஊக்குவித்தலும் அவற்றிற்கு அனுசரணையளித்தலும்,

(உ) வருங்காலக் கொள்வனவாளர்களிடையே இரத்தினக்கல் கைத்தொழிலிலும் ஆபரணக் கைத்தொழிலிலும் நம்பிக்கையை உருவாக்குவதற்குத் தேவையான நடடிக்கைகளை எடுத்தல்,

(ஊ) இலங்கையிலிருந்து இரத்தினக் கற்களைச் சட்ட விரோதமாக அகற்றுதலையும் சட்ட விரோத இரத்தினக்கல் அகழ்தலையும் தடை செய்தல்,

(எ) அரசாங்கத்திடம் சுரங்க அகழ்வு அல்லது இரத்தினக்கல் அகழ்தல் உரிமைகள் ஏதேனும் ஒதுக்கம் அல்லது பிற காரணத்தின் நிமித்தம் இருக்குமிடத்து அரசாங்க காணியில் அல்லது அரசாங்க காணிக்கு மேல் அல்லது அரசாங்கத்தினால் அல்லது அரசாங்க இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தினால் தீர்வு செய்யப்பட்ட காணியில் அல்லது காணியின் மேல் இரத்தினக்கற்கள் அகழ்வதற்கான உரிமையைப் பராதீனப்படுத்துவதற்குப் பொறுப்பான பிரத்தியேக அதிகாரசபையாகக் கடமையாற்றுதல்.

(ஏ) இரத்தினக்கற்கள், ஆபரணங்களின் சந்தைப்படுத்தலுக்குத் தேவையான தொழிநுட்ப மற்றும் பிற ஆலோசனைகளையும் உட்கட்டமைப்பு ஆதரவையும் வழங்குதல்,

(ஐ) எந்த பட்டியற்படுத்தப்பட்ட எழுத்திலான சட்டத்தின் நிருவாகத்தையும் அது பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்வதாக இருக்குமிடத்து மேற்கொள்ளுதல்,

(i) அது, இரத்தினக்கற்களின் அல்லது இரத்தினக்கல் கைத்தொழில் விடயத்தில் ஏற்புடைத்தானதாக இருக்குமிடத்து

அல்லது

(ை) இச் சட்டத்தின் கீழ் இவ் அதிகாரசபை அதன் அதிகாரங்கள், பணிகள், கடமைகளை செயற்படுத்துவதையும் நிறைவேற்றுவதையும் மேற்கொள்வதையும் இயலச் செய்யும் நோக்கத்திற்கு அவ்வண்ணம் செய்வது தேவையானதாக இருக்குமிடத்து,

(ஒ) இரத்தினக்கற்களின் சான்றுப்படுத்தலுக்கும் விலைமதிப்பற்ற உலோகங்களைப் பரீட்சித்து சான்றுறுதிப்படுத்தும் அலுவலகங்களை ஸ்தாபித்தல்,

(ஓ) உற்பத்தியாளரொருவரின் கோரிக்கையின் பேரில் விதத்துரைக்கப்பட்ட விதத்தில் ஹால்மாக் முத்திரை ஒன்றுடன் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஆபரணங்களுக்கு முத்திரையிடல்.

(ஔ) இலங்கையில் இரத்தினக்கல் கைத்தொழிலினதும் ஆபரணக் கைத்தொழிலினதும் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் கூட்டிணைப்பதற்குமாக இரத்தினக்கல் கைத்தொழிலுக்கும் ஆபரணக் கைத்தொழிலுக்கும் அரசாங்கத் திணைக்களங்களுக்கும் இடையே தேவையான இணைப்பை ஏற்படுத்துதல்,

(க) இரத்தினக்கல் கைத்தொழிலும் ஆபரணக் கைத்தொழிலும் பணியாற்றுகின்ற ஆட்களின் வேலையின் நியதிகள், நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் குறிப்பாக அத்தகைய ஆட்களை உயிராபத்திலிருந்தும் உடல் ஆபத்திலிருந்தும் பாதுகாப்பதற்கு எடுக்கப்படவுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்தலும்.

## 3. நிதி

### 3.1 திரவத்தன்மை

இவ்வாண்டின் ஆரம்பத்தில் காசு, காசிற்குச் சமனானவைகள் ரூபா 84.908 மில்லியனாக இருந்தது. இவ்வாண்டின் இறுதியில் இது ரூபா 122.833 மில்லியனாக இருந்தது. ஆண்டின் ஆரம்பத்தில் முதிர்வு வரையுள்ள முதலீடுகள் (திறைசேரி உண்டியல்) ரூபா 1198.625 மில்லியன் ஆகவும் ஆண்டின் இறுதியில் ரூபா 1647.583 மில்லியனாகவும் காணப்பட்டது.

ஆண்டின் ஆரம்பத்தில் உள்ள ஏனைய நிதிச் சொத்துக்கள் ரூபா 880.82 மில்லியனாகவும் ஆண்டின் இறுதில் இது ரூபா 934.275 மில்லியன் தொகையாகவும் காணப்பட்டது.

## 3.2 இலாபத் தகவு :

| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|
| | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** | **ரூபா மில்** |
| மொத்த வருமானம் | 665.818 | 588.609 | 604.581 | 427.8 | 676.6 | 968.6 |
| மொத்த செலவினம் | 536.971 | 442.051 | 417.146 | 393.7 | 434.6 | 542.8 |
| **இலாபம் (வரிக்கு முன்னர்)** | **128.847** | **146.558** | **187.435** | **34.1** | **242** | **425.8** |

## 04. மனித வளங்கள்

தொழிசார் உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கி 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இவ் அதிகாரசபையின் பதவியினர் 240 பேர்களாக இருந்தனர். எமது குழு உறுப்பினர்களின் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டன. ஆண்டின் போது பதவியணியினருக்கான உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிக் கிரயம் ரூபா 2,424,603 ஆகும்.

## 05. அனுமதிப்பத்திரங்கள் வழங்கல்

அதிகாரசபையின் பிராந்திய அலுவலகங்களாலும் கொழும்பு அலுவலகத்தாலும் இரத்தினக்கல் கைத்தொழிலுக்காகக் கடந்த ஐந்து ஆண்டுகளுடன் ஒப்பிட்டு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|---|
| இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் | 5240 | 4,817 | 5,532 | 5,203 | 4,665 | 4,434 | 5,322 |
| இரத்தினக்கல் வணிகர்கள் அனுமதிப்பத்திரங்கள் | 6102 | 5,328 | 4,795 | 5,449 | 3,481 | 3,628 | 7,193 |
| பட்டை தீட்டல் அனுமதிப்பத்திரங்கள் | 243 | 225 | 211 | 203 | 146 | 120 | 192 |
| இரத்தினக்கல் ஏலவிற்பனை அனுமதிப்பத்திரங்கள் | 491 | 461 | 415 | 684 | 388 | 444 | 729 |
| **மொத்த அனுமதிப்பத்திரங்கள்** | **12,076** | **10,831** | **10,953** | **11,539** | **8,680** | **8,626** | **13,436** |

**6. அதிகாரமளிக்கப்படாத இரத்தினக்கல் அகழ்வையும் சூழலுக்குச் சேதம் விளைவிக்கப்படுவதையும் கட்டுப்படுத்தல்**

சட்ட விரோதமான இரத்தினக்கல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கும் சூழலின் அழிவைத்தடுப்பதற்குமாக மீளாய்வுக் காலப்பகுதியில் இவ் அதிகாரசபை பல்வேறு திடீர்ச் சோதனைகளை மீளாய்வுக் காலப்பகுதியில் நடாத்தியுள்ளது. மீளாய்வாண்டின் போது அதிகாரசபையால் தண்டப் பணத்திலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 15.804 மில்லியனாகும்.

**07. விசேட இரத்தினக்கல் அகழ்வுச் செயற்திட்டங்கள்**

ஆண்டின் போது ஹெரனியவக, மௌன்ட்ஜின் மற்றும் நமுனியவத்த பகுதியில் விசேட இரத்தினக்கல் அகழ்வுச் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் விற்பனை மூலமான வருமானம் ரூபா 54.667 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது.

**08. ஏற்றுமதி ஊக்குவிப்பும் விளம்பரப்படுத்தல் நடவடிக்கைகளும் 2022**

1. நாட்டிற்குள் நுழையும் வெளிநாட்டவர்களுக்கு விசா பரிந்துரைகள் வழங்குதல்.

2. பிற நாடுகளில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு விசா வசதியைப் பெற உதவுதல்.

3. அ.டொ. 50,000 வரை மதிப்புள்ள இரத்தினக்கற்களைக் கொள்வனவு செய்வதற்கான அந்நிய செலவாணிக்கு பரிந்துரை வழங்குதல்.

4. வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் விளம்பர பிரசுரங்கள் மற்றும் கையேடுகள் பரப்பப்புதல்.

5. இரத்தினக்கல் உற்பத்தி நாடுகள் தொடர்பாக உள்ளூர் அகழ்வுச் சமூகத்திற்கு விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துதல். (வணிகக் குழுக்களை ஒழுங்குபடுத்துதல்).

6. ஏஹலியகொட தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை கட்டிடத்தில் இரத்தினக்கல் மற்றும் நகை வர்த்தகக் காட்சியகம் (13 கடைகள் உள்ளடங்கலாக) நிறுவப்பட்டு, இரத்தினக்கல் மற்றும் நகை வர்த்தகர்களிடம் கடைகள் ஒப்படைக்கப்பட்டன.

7. இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலை மேம்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட விளம்பர வீடியோக்களைத் தயாரித்து (இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில் கைவினைத்திறன், தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை இரத்தினக்கல் ஆய்வுகூடம், தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை மதிப்பீட்டு அலுவலகம், தேசிய இரத்தினக்கல், ஆபரண பரிமாற்றல்கள்) பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் குடிவரவுப் பகுதியில் விளம்பரப்படுத்தல்.

8. இலங்கையின் தனித்துவமான நகை வடிவமைப்புகளை மேம்படுத்துவதற்காக காபி டேபிள் நூலைத் தயாரித்தல்.

- நகை வடிவமைப்புகளைச் சேரிப்பதற்கான விளம்பரப்படுத்தல்.
- குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆபரண வடிவமைப்புகள்
- தேர்ந்தெடுக்கப்பட்ட வடிவமைப்புகளை மேம்படுத்துவதற்காக வடிவமைப்பாளர்களுக்கு அனுப்புதல்.
- மேம்படுத்தப்பட்ட வடிவமைப்புகளை குழுவின் மூலமாக மதிப்பீடு செய்தல்.

9. இரஷ்யாவில் உள்ள இலங்கை தூாரகத்துடன் இரஷ்ய ஆபரண இரத்தினக்கல் வர்த்தகத்திற்கும் இலங்கை வர்த்தகர்களுக்கும் இடையே ஓர் ‘‘சூம்’’ வாயிலான கூட்டம் இடம்பெற்றது.

10. சாத்தியமான இரத்தினக்கல், ஆபரணக் கொள்வனவாளர்களுக்கும் இலங்கை இரத்தினக்கல் ஆபரண ஏற்றுமதியாளர்களுக்கும் இடையே பீ2பீ சந்திப்பை நடாத்துவதற்கான வசதி செய்துகொடுக்கப்பட்டது.

11. சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சிகளில் இலங்கைக்கான களம் ஒழுங்கமைக்கப்பட்டது.

- துபாயில் வேர்ல்ட் எக்ஸ்போ 2020 – 6 திசெம்பர் 2021 முதல் 09 சனவரி 2022 வரை.

12. உள்நாட்டில் நடைபெறும் சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சிகளுக்கு உதவுதல்.

- இலங்கையின் கோவிட் 19 நிலைமை காரணமாக 2022 இல் உள்ளூர் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

13. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் போன்ற அரசாங்க நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட உள்ளூர் கண்காட்சிகளில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையின் பங்கேற்பை ஒழுங்கமைத்தல்.

14. இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் இணையதளத்தின் மூலம் ஒன்லைன் வர்த்தக முகாமை.

15. இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையில் பணிபுரியும் வெளிநாட்டவர்களுக்கு விசா பரிந்துரைக் கடிதங்களை வழங்குதல் (வழங்கப்பட்ட விசா பரிந்துரைகளின் எண்ணிக்கை).

16. அதிகாரசபை இணையதளத்தினுடாக ஒன்லைன் ஏற்றுமதியாளர்களுக்கான வாய்ப்புகளை அறிமுகப்படுத்தல்.

17. ஆபரணக் கைவினைஞர்களுக்கு உற்பத்திக் கருவிகளை விநியோகித்தல்.

18. இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதி நடைமுறை தொடர்பாக செயலமர்வுகளை நடாத்தல்.

19. இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளிடையே விளம்பரப்படுத்துவதற்காக ''பாரம்பரிய நகை கைவினைக் கிராமங்களை'' பரிந்துரை செய்து விளம்பரப்படுத்தல்.

20. ஆபரண கைவினைஞர் சங்கப் பிரச்சனைகளைக் கண்டறிவதற்காக அவர்களுடன் கூட்டங்களை ஒழுங்குபடுத்தி நடாத்துதல்.

21. ஆபரண சங்கங்களுடன் பதிவு செய்யப்பட்ட ஆபரண தயாரிப்பாளர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக ஆபரணத் தயாரிப்புக் கருவிகளைக் கொள்வனவு செய்தல்.

22. வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் பிரதிநிதிகளுக்கும் குறுகிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல்.

## 09. ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள்

1. ஆபரணத் துறையின் மேம்பாட்டிற்காக எக்ஸ் கதிர் பிளோரசன்ட் ஸ்பெக்ரோஸ் கோபி மற்றும் லேசர் இயந்திரங்கள் போன்ற புதிய இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

2. ஆண்டின் போது 47 எண்ணிக்கையான உற்பத்திக் கருவிகள் ஆபரணக் கைவினைஞர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.

3. ஆபரண உற்பத்தியாளர்களைப் பதிவுசெய்து 2022 ஆம் ஆண்டிற்காக 1504 ஆளடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டன.

4. இரத்தினபுரியில், தெமுவாவத்த சர்வதேச இரத்தினக்கல் கோபுர நிர்மாணப் பணிகள் நடைமுறையில் உள்ளதுடன் தற்போதைய பௌதீகப் பூர்த்தியளவு 87% ஆகும்.

5. 2022 ஆம் ஆண்டின் போது 9370 இரத்தினக்கல் சோதனைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. மதிப்பீடு மற்றும் ஹால்மார்க் தொடர்பாக 29,264 சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

6. சுரங்க உரிமங்களை வழங்கும் நோக்கிற்காக “ வன் ஸ்டொப் சிஸ்டம்” எனும் கொள்கை திருப்திகரமாக செயற்பாட்டில் உள்ளது.

7. ஆண்டின் போது 10 சபைக் கூட்டங்களும் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களும் இடம்பெற்றன.

8. இரத்தினக்கல் அகழ்வு நலன்புரி நிதியத்தில் இருந்து இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கைகளின் போது மரணித்தவர்களிற்காக தலா ரூபா 750,000 படி 03 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும்,இக் காலப்பகுதியின் போது நேர்ந்த சிறு காயங்களிற்கான ஊழிய நட்டஈட்டுத்தொகையாக ரூபா 590,000 செலுத்தப்பட்டிருந்தது.

10. **இரத்தினக்கல் ஆபரண ஏற்றுமதிகள்**

கீழே தரப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளிலும் மீளாய்வாண்டான 2022 ஆம் ஆண்டிலும் இலங்கை இரத்தினக்கல், ஆபரண ஏற்றுமதிகளின் நிலையைக் காண்பிக்கின்றன.

| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|
| | ருபா மில் | ருபா மில் | ருபா மில் | ருபா மில் | ருபா மில் | ருபா மில் |
| இரத்தினக்கல் ஏற்றுமதிகள் | 21,644 | 22,304 | 19,364 | 13,120 | 21,619 | 69,706 |
| ஆபரண ஏற்றுமதிகள் | 2,331 | 2,062 | 2,476 | 1,257 | 2,002 | 4,511 |
| கெவுடா ஏற்றுமதிகள் | 33 | 19 | 10 | 18 | 27 | 23 |
| வைர மீள் ஏற்றுமதிகள் | 14,134 | 19,393 | 23,670 | 16,321 | 28,291 | 70,642 |
| வைர ஆபரண ஏற்றுமதிகள் | 207 | 190 | 242 | 168 | 356 | 540 |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **38,349** | **43,968** | **45,762** | **30,884** | **52,295** | **145,422** |

| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|
| | அ.டொ. மில் | அ.டொ. மில் | அ.டொ. மில் | அ.டொ. மில் | அ.டொ. மில் | அ.டொ. மில் |
| இரத்தினக்கல் ஏற்றுமதிகள் | 140.27 | 137.60 | 107.21 | 70.62 | 112.19 | 208.46 |
| ஆபரண ஏற்றுமதிகள் | 15.09 | 12.61 | 13.73 | 6.74 | 9.96 | 13.86 |
| கெவுடா ஏற்றுமதிகள் | 0.21 | 0.12 | 0.06 | 0.10 | 0.14 | 0.08 |
| வைர மீள் ஏற்றுமதிகள் | 91.53 | 118.35 | 131.02 | 92.70 | 140.63 | 211.46 |
| வைர ஆபரண ஏற்றுமதிகள் | 1.34 | 1.17 | 1.34 | 0.90 | 1.78 | 1.65 |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **248.44** | **269.85** | **253.36** | **171.06** | **264.70** | **435.51** |

**திரு. விராஜ் டீ சில்வா** **2023.02.28**

தலைவர் & நிறைவேற்று உத்தியோகத்தர்

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை
## 2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான
### நிதிச் செயலாற்றல் கூற்று

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| | குறிப்பு | ரூபா சதம் | ரூபா சதம் |
| வருமானம் | **28** | 688,982,632.28 | 525,887,828 |
| ஏனைய வருமானம் | **29** | 12,131,873.74 | 21,719,148 |
| நிர்வாகச் செலவுகள் | **30** | (254,891,259.68) | (179,454,720) |
| ஆளணிச் செலவுகள் | **31** | (281,318,241.42) | (242,186,326) |
| ஊக்குவிப்புச் செலவுகள் | **32** | (6,647,506.92) | (12,903,628) - |
| **செயற்பாட்டு இலாபம்** | | **158,257,498.00** | **113,062,301** |
| தேறிய நிதி வருமானம் | **33** | **267,490,209.82** | 128,960,706 |
| **தேறிய நிதி வருமானத்தின் பின்னரான இலாபம்** | | **425,747,707.82** | **242,023,008** |
| வரிக்கு முன்னரான இலாபம் | | **425,747,707.82** | **242,023,008** |
| வருமான வரிச் செலவினங்கள் | **34** | (97,515,102.16) | (37,973,066) |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **328,232,605.66** | **204,049,942** |
| ஆண்டிற்கான இலாபம் | | 328,232,605.66 | 204,049,942 |
| ஏனைய ஒருங்கிணைப்பு வருமானம் | | - | - |
| கழி: | | | |
| **திரண்ட நிதியத்திற்கான பங்களிப்பு** | | (50,000,000.00) | (40,000,000.00) |
| **ஆண்டிற்கான மொத்த ஒருங்கிணைப்பு வருமானம்** | | **278,232,605.66** | **164,049,942** |

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை
## 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| | குறிப்பு | ரூபா சதம் | ரூபா சதம் |
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதன, பொறி, உபகரணம் | **3** | **616,521,711.56** | 514,319,799 |
| குத்தகைக் காணி (காணியைப் பயன்படுத்தும் உரிமை) | **4** | **9,451.00** | 11,815 |
| ஏனைய சொத்துக்கள் | **7** | **765,316,000.00** | 371,939,331 |
| விற்பனைக்காக நிதிச் சொத்துக்கள் | **8** | **1,200,010.00** | 1,200,010 |
| மூலதன நடைமுறை வேலை | | **232,333,278.12** | 118,773,637 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | **14** | **26,890,229.05** | 26,890,229 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **1,642,270,680** | **1,033,134,821** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புகள் | **9** | **5,627,581.14** | 4,092,575 |
| பெறவேண்டியவைகள் | **10** | **191,927,790.72** | 95,619,502 |
| முதிர்வடைந்த முதலீடுகளில் உள்ளவை | **11** | **1,647,583,269.46** | 1,198,624,995 |
| வைப்புகளும் முற்பணங்களும் | **12** | **174,657,139.39** | 177,113,499 |
| ஊழியர் கடன்களும் முற்பணங்களும் | **13** | **17,894,799.97** | 15,077,003 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | **14** | **907,385,208.00** | 853,929,105 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | **15** | **122,833,900.74** | 84,908,410 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **3,067,909,689.42** | **2,429,365,089** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **4,710,180,369.15** | **3,462,499,910** |

| | | | |
|---|---|---|---|
| **உரிமை மூலதனம்** | | | |
| திறைசேரியால் பங்களிப்பு மூலதனம் | **16** | **30,000,000.00** | 30,000,000 |
| இரத்தினக்கல் அகழ்வு நலன்புரி நிதியம் | **17** | **34,807,024.09** | 34,154,874 |
| ஆபரண அபிவிருத்தி நிதியம் | **18** | **90,698,473.03** | 82,536,818 |
| இரத்தினக்கல் பரிசூதிய நிதியம் | **19** | **45,226,589.61** | 46,594,806 |
| இரத்தினக்கல் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | **20** | **748,548,000.00** | 355,074,648 |
| மீள்மதியீட்டு ஒதுக்கம் | **21** | **180,825,107.39** | 52,945,424 |
| நிறுத்திவைக்கப்பட்ட வருமானம் | | **1,430,372,598.66** | 1,150,277,528 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | **2,560,477,792.78** | **1,751,584,098** |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | |
| இளைப்பாறல் கடன் கடப்பாடு | **22** | **36,338,770.73** | 45,753,331 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் | **6** | **26,597,340.28** | 24,368,131 |
| குத்தகைக் கொடுப்பனவுகளின் பொறுப்பு – ஒரு வருடத்திற்கு மேல் முதிர்வுக் காலம் உள்ள தீர்ப்பனவுகள் | **23.1** | **1,742.75** | 2,742 |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | **62,937,853.76** | **70,124,203** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| குத்தகைக் கொடுப்பனவுகளின் பொறுப்பு – ஒரு வருடத்திற்குள் முதிர்வுக் காலமுள்ள தீர்ப்பனவுகள் | **23.1** | **1,668.00** | 1,669 |
| செலுத்த வேண்டியவைகள் | **24** | **286,151,680.94** | 213,550,981 |
| இரத்தினக்கல் அகழ்விற்கான வைப்புகள் | | **993,253,918.33** | 840,553,983.32 |
| பெற்ற வைப்புகளும் முற்பணங்களும் | **25** | **132,880,824.63** | 115,846,060 |
| நியதிச்சட்டக் கொடுப்பனவுகள் | **26** | **622,002,115.40** | 392,510,500 |
| **ஏற்பாடுகளும் நிலுவைச் செலவினங்களும்** | **27** | **52,474,515.31** | 78,328,415 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **2,086,764,722.61** | **1,640,791,608** |
| **உரிமை மூலதனம் & பொறுப்புகள்** | | **4,710,180,369.15** | **3,462,499,910** |

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் விதந்துரைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நிய தேவைப்பாட்டின் படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நிதிப் ப சான்றுறுதிப்படுத்துகின்றார்.

....................................................

**நிதிப் பணிப்பாளர்**

20 - **34** ஆம் பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் **37** - **58** ஆம் பக்கங்களில் உள்ள குறிப்புகள் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைந்தவையாகும்.
நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பித்தலிற்கும் பணிப்பாளர் சபை பொறுப்புடையதாகும். நிதிக்கூற்றுக்கள் 2023 பெப்ரவரி 27 ஆம் திகதி பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

...................................................... .................................

**தலைவர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்**

**பணிப்பாளர்**

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை
## 2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2022 | 2021 |
|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் |
| **வரிக்கு முன் இலாபம்** | **425,747,708** | **242,023,008** |
| **பின்வருவனவற்றிற்கான சீராக்கங்கள்** | | |
| பெறுமானத் தேய்வு | 49,003,686 | 34,431,460 |
| ஓய்வூதிய நலக் கடப்பாடுகளுக்கான ஏற்பாடு | 13,632 | 960,314 |
| தொழிலாளர் நலக் கடப்பாடுகளுக்கான ஏற்பாடு | 7,743,886 | - |
| பங்கிலாபங்கள் | (600,000) | - |
| வட்டி வருமானம் | (267,548,442) | (128,999,414) |
| குத்தகைக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான பொறுப்புகள் மீதான நிதிக் கிரயம் | 58,232 | 38,708 |
| காணிப் பயன்பாட்டு உரிமைகளுக்கான காலக்கழிவு | 2,364 | 2,364 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களின் முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **214,421,066** | **148,456,440** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| இருப்புகள் | (1,535,007) | (1,522,805) |
| பெறவேண்டியவை | 19,257,829 | (32,130,057) |
| வைப்புகள் மற்றும் முற்பணங்கள் | 2,456,360 | (13,632,200) |
| ஊழியர் கடன்களும் முற்பணங்களும் | (2,817,797) | 2,865,876 |
| செலுத்த வேண்டியவை | 72,600,700 | 13,392,181 |
| இரத்தினக்கல் அகழ்வு வைப்புக்கள் | 154,557,541 | 132,744,612 |
| பெற்ற வைப்புகளும் முற்பணங்களும் | 17,034,765 | (16,619,859) |
| ஏற்பாடுகளும் அட்டுறு செலவினங்களும் | (25,853,899) | 5,784,423 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசு** | **450,121,558** | **239,338,611** |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (9,630,080) | (3,655,248) |
| செலுத்தப்பட்ட வரிகள் | (38,588,746) | (16,480,089) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **401,902,732** | **219,203,274** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதன, பொறி, உபகரணங்களின் கொள்வனவு | (21,564,451) | (64,866,955) |
| பங்கிலாபப் பெறுவனவுகள் | 300,000 | - |
| ஏனைய திறைசேரி உண்டியல்களில் முதலீடு | (448,958,275) | (185,000,000) |
| நிதிச் சொத்துக்களில் தேறிய முதலீடு | (53,456,103) | (38,006,353) |
| பெற்ற வட்டி | 152,282,324 | 93,872,073 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட) இருந்தான தேறிய காசு** | **(371,396,505)** | **(194,001,235)** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| இரத்தினக்கல் அகழ்வின் நலன்புரி நிதியப் பயன்பாடு | 652,150 | 2,415,000 |
| குத்தகைக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான பொறுப்புகளின் தீர்ப்பனவு | (26,325) | (26,325) |
| ஆபரண அபிவிருத்தி நிதியத்தின் பங்களிப்பு | 8,161,655 | 1,360,940 |
| இரத்தினக்கல் பரிசூதிய நிதியப் பங்களிப்பு | (1,368,217) | 1,847,248 |
| **நிதி நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட) இருந்தான தேறிய காசு** | **7,419,263** | **5,596,863** |
| **காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளின் தேறிய மாற்றங்கள்** | **37,925,491** | **30,798,902** |
| **ஆண்டின் ஆரம்பத்திலான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்** | **84,908,410** | **54,109,508** |
| **ஆண்டின் இறுதியிலான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள** (குறிப்பு 15) | **122,833,901** | **84,908,410** |

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை**

**2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்**

---

**1. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு**

**1.1 தயாரிப்பு அடிப்படை**

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் ("அதிகாரசபை") நிதிக்கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs). அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிச் சொத்துக்கள் அவற்றின் வரலாற்றுக் கிரயம், அவற்றின் விற்பனையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய நியாயப் பெறுமதிக்கு மாற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சில சிக்கலான கணக்கீட்டு மதிப்பீடுகள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களில் (SLFRSs) விபரிக்கப்பட்ட விடயங்களுக்கேற்ப நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோக நடைமுறையில் அதன் நடுநிலைத் தன்மையை முகாமைத்துவம் பிரயோகிப்பதற்கு அது வேண்டப்படுகின்றது. உயர்மட்ட நடுநிலைத் தன்மைகள் அல்லது சிக்கல்கள் அடங்கிய பகுதிகள் அல்லது நிதிக்கூற்றுக்களில் மதிப்பீடுகள் முக்கியத்துவம் பெறுகையில் அவை வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**1.2 கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள்**

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள் குறிப்பிடப்பட்டாலன்றி, சுருக்கமான நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பணம் முதல் SLFRSs மாற்றப்பட்ட திகதியின் ஆரம்ப நிதி நிலைமைக் கூற்று வரையான காலப்பகுதியின் போது தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டுள்ளன.
முன்னைய ஆண்டின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றின் வெளிப்படுத்தலும் வகைப்படுத்தலும் உரிய வகையில் சிறந்த வெளிப்படுத்தலுக்காகவும் நடப்பாண்டினதுடன் ஒப்பிடுவதற்கு ஏதுவான வகையிலும் திருத்தப்பட்டுள்ளன.

**1.3 அன்னிய செலாவணிப் பரிமாற்றம்**

**1.3.1 செயற்பாட்டு மற்றும் வெளிப்படுத்தல் நாணயம்**

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும் நிறுவகம் செயற்படும் முதல்நிலைப் பொருளாதாரச் சூழல் நாணயத்தைப் பயன்படுத்தி அளவிடப்பட்டதாகும். அதிகாரசபையின் வெளிப்படுத்தல் நாணயமான இலங்கை ரூபாக்களில் (எல்கேஆர்) நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 1.3.2 கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும்

கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற திகதியில் நிலவும் பரிமாற்று விகிதத்தைக் பயன்படுத்தி செயற்பாட்டு நாணயத்திற்கு அன்னிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பரிமாற்றப்பட்டுள்ளன. கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவிலிருந்து விளைபவற்றையும் அன்னிய செலாவணிகளில் வெளிப்படுத்தப்படும் நாணயச் சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் ஆண்டின் இறுதியிலான பரிமாற்றங்களிலிருந்தான அன்னிய செலாவணிப் பரிமாற்று இலாபங்களும் நட்டங்களும் விபரமான வருமானக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

காலக்கழிவுக் கிரயத்திலான மாற்றங்கள் தொடர்பான பரிமாற்றல் வேறுபாடுகளும் விபரமான வருமானக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டடுள்ளன.

### 1.3.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆரம்பத்தில் அவற்றின் கிரயத்தில் அங்கீகரிக்கப்பட்டு முகாமைத்துவத்தால் வேண்டப்பட்டவாறு இயங்கும் நிலைக்கும் தற்போதைய இடத்திற்கு கொண்டுவரப்படுவதற்காக நேரடியாக ஏற்கப்படும் எந்தக் கிரயத்தையும் உள்ளடக்கியுள்ளன.

1998 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2011 திசெம்பர் 31 இற்கு முன்னரான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (SLAS) படி தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றிலான மீள்பெறுமதியிடப்பட்ட தொகையில் கொண்டுவரப்பட்டுள்ளன. மீள்பெறுமதியிடப்பட்ட தொகை மீள்பெறுமதியிடப்பட்ட திகதியில் நிலவிய நியாயப் பெறுமதியுடன் பாரியளலில் ஒப்பிடப்பட்டமையால் அதனையே மீள்பெறுமதியிடப்பட்ட தொகையாக அதிகாரசபை ஏற்றுக்கொண்டிருந்தது. இதன் படி ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட சேத இழப்புகள் கழிக்கப்பட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளன. 1998 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட சேத இழப்புகள் கழிக்கப்பட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளன.

தொடர் கிரயங்கள் சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் உள்ளடக்கப்படுகின்றன. அவ்வாறல்லாதவிடத்து, அதிகாரசபைக்கு விடயத்துடன் தொடர்புபட்ட எதிர்கால பொருளாதார நலன் பாய்ச்சப்பட்டு விடயத்தின் கிரயம் நம்பகமான முறையில் அளவிடப்படுகையில் மாத்திரமே ஓர் சொத்தாக அங்கீகரிக்கப்படுகின்றது. சகல ஏனைய திருத்தங்களும் பராமரிப்பும், அவை

உறப்பட்ட நிதிக் காலப்பகுதிக்கான விபரமான வருமானக் கூற்றில் சாட்டப்பட்டுள்ளன.

சகல வகையான மோட்டார் வாகனங்களும் மீளாய்வாண்டின் போது மீள்பெறுமதியிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு – 03, காலி கோல் பேஸ் டெரஸ், இல. 25 இல் அமைந்துள்ள தலைமையகக் கட்டிடம் மேற்குறித்த வளாகத்திற்கு அண்மையில் ஓர் கட்டிட நிர்மாணிப்பின் காரணமாக சேதமடைந்துள்ளது. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தின் பரிந்துரையுடன் அலுவலக நடவடிக்கைகள் இடமாற்றப்பட்டன. பின்னர், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நட்டஈடு கோரி நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சேதத்தை மதிப்பிடுவதற்கு நிபுணர்களின் சேவைகளிற்காக மொறட்டுவ பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அவ் அறிக்கை கிடைக்கப்பெற்றதும் கட்டிடத்தின் கொண்டு செல்லல் பெறுமதி சீராக்கப்படும்.

காணி பெறுமானத்தேய்விடப்படாததுடன் ஏனைய சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு பின்வருமாறு அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலப்பகுதியில் அவற்றின் கிரயம் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கிரயத்தினை ஒதுக்கும் வகையில் நேர்கோட்டு முறையைப் பயன்படுத்திக் கணிப்பிடப்பட்டுள்ளது.

| **சொத்துக்களின் வகை** | | **வீதம்** |
|---|---|---|
| கட்டிடங்கள் | 30-50 வருடங்கள் | 2% - 3.33% |
| பாகமாக்கல் | 3 வருடங்கள் | 33.33 % |
| ஆய்வுகூடமும் ஆபரண ஆய்வு உபகரணமும் | 10 வருடங்கள் | 10% |
| தளபாடமும் அலுவலக உபகரணமும் | 10 வருடங்கள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 4 வருடங்கள் | 25% |
| கணனி உபகரணங்கள் | 5 வருடங்கள் | 20% |
| ஏனையவை | 10 வருடங்கள் | 10% |

சொத்தொன்றின் கொண்டுசெல்லல் தொகை அதன் மதிப்பிடப்பட்ட அறவிடப்பட வேண்டிய தொகையைப் பார்க்கிலும் உயர்வானதெனில் அதன் அறவிடப்பட வேண்டிய தொகையிலிருந்து சொத்தொன்றின் தொகை உடனடியாக பதிவழிக்கப்பட்டுள்ளது.

### 1.3.4 அருவகச் சொத்துக்கள்

கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருட்கள் அவை கொள்வனவு செய்யப்படுவதற்கு ஏற்பட்ட செலவினங்களினதும் குறித்த மென் பொருட்களையும் முறைமைகளையும் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும் அடிப்படையிலிருந்து மூலதனமாக்கப்படுகின்றன. கொள்வனவு செய்யப்பட்ட அருவகச் சொத்துக்கள் கிரயத்திலிருந்து திரண்ட காலக்கழிவு மற்றும் திரண்ட சேத இழப்புகள் கழிக்கப்பட்டே வெளிப்படுத்தப்படுகின்றன. இக் கிரயங்கள் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலங்களிற்கிடையே காலக்கழிவு செய்யப்பட்டுள்ளன.

| | | **வீதம்** |
|---|---|---|
| கணனி மென்பொருள் | 5 ஆண்டுகள் | 20% |

கணனி மென்பொருட்களைப் பேணுவதற்கான கிரயங்கள் ஏற்கப்பட்ட ஓர் செலவினமாகக் கருதப்படுகின்றது.

### 1.3.5 குத்தகைக் காணி

குத்தகையில் உள்ள காணிகள் படிப்பெருக்க கடன்வாங்கு விகிதத்துடன் ஆரம்பத்தில் செலவிடப்பட்ட ஏதேனும் நேரடிக் கிரயங்களைக் கூட்டி கழிவிற்குள்ளான குத்தகைக் கட்டணத்தின் நிகழ்கால பெறுமதிக்குச் சமனான ஓர் தொகையில் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்டு பின்னர் குத்தகைக் காணிகள் காலக்கழிவுக் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன. குத்தகைக் காணிகள் குத்தகைக் காலப்பகுதியில் காலக்கழிவிடப்படுகின்றன.

| | | **வீதம்** |
|---|---|---|
| குத்தகைக் காணி | 30 ஆண்டுகள் | 3.33% |

### 1.3.6 நிதியல்லாச் சொத்துக்களின் சேதம்

ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலும் அதிகாரசபை அதன் ஆதன, பொறி மற்றும் இயந்திரங்களினதும் அருவகச் சொத்துக்களினதும் தொகைகளை அச் சொத்துக்கள் சேதமடைந்துள்ளமைக்கான ஏதேனும் அறிகுறிகள் உள்ளனவா என்பதை நிர்ணயிப்பதற்காக மீளாய்வுசெய்கின்றது. அத்தகைய ஏதேனும் அறிகுறிகள் காணப்படின் சேத இழப்பின் அளவை நிர்ணயிப்பதற்கு சொத்தின் அறவிடப்பட வேண்டிய தொகை மதிப்பிடப்படுகின்றது.

நியாயக் கிரயங்களிலிருந்து விற்பனைக்கான கிரயங்களைக் கழித்து வரும் பெறுமதியையும் பயன்பாட்டுப் பெறுமதியையும் ஒப்பிடுகையிலான கூடிய பெறுமதியே அறவிடப்பட வேண்டிய தொகையாகும். பயன்பாட்டுப் பெறுமதியை மதிப்பிடுகையில் பணப் பெறுமதியீட்டுக் காலத்தின் நடைமுறை சந்தை மதிப்பீடுகளையும் எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் மதிப்பீடுகள் சீராக்கப்படாத குறித்த சொத்துக்களின் இடர்களையும் பிரதிபலிக்கும் முன் வரிக் கழிவு விகிதத்தைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதியில் மதிப்படப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் கழிவிடப்படுகின்றன.

சொத்தொன்றின் கொண்டுசெல்லல் தொகையைப் பார்க்கிலும் மதிப்பிடப்பட்ட அறவிடப்பட வேண்டிய தொகை குறைவாக இருப்பின் சொத்தின் கொண்டுசெல்லல் பெறுமதி, அதன் அறவிடப்பட வேண்டிய தொகைக்குக் குறைக்கப்பட்டுள்ளது. விபரமான வருமானக் கூற்றில் உடனடியாக சேத இழப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.4 நிதிச் சொத்துக்கள்

### 1.4.1 வகைப்படுத்தல்

**(அ) வகைப்படுத்தல்**

அதிகாரசபை ஆரம்ப இனங்காணலில் நிதிச் சொத்துக்களை அவற்றின் வகைப்படுத்தலில் நிர்ணயிப்பதுடன் பின்வருமாறு அதன் நிதிச்சொத்துக்களை வகைப்படுத்துகின்றது.

I. கடன்களும் பெறவேண்டியவைகளும்

II. விற்பனைக்காக உள்ளவை (AFS)

III. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)

**ஐ. கடன்களும் பெறவேண்டியவைகளும்**

ஓர் தொழிற்படு சந்தையில் கோரப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான வழிவரா நிதிச் சொத்துக்களே கடன்களும் பெறவேண்டியவையுமாகும். இறுதி அறிக்கைக் காலத்தை அடுத்து 12 மாதங்களுக்கு மேலான முதிர்வுக்காலத்தைக் கொண்ட நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுபவை தவிர்ந்த கடன்களும் பெறவேண்டியவையும் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதிகாரசபையின்

கடன்களும் பெறவேண்டியவையும் அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியிலான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை, அரசாங்க பிணைகளின் மீள்கொள்வனவு, முற்பணங்கள், வைப்புகள், ஊழியர்களுக்கான கடன்கள் மற்றும் காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்குகின்றன.

ஐஐ. **விற்பனைக்காக உள்ளவை (AFS)**

விற்பனைக்காக உள்ள நிதிச்சொத்துக்கள் வழிவராதவையாக ஒன்றில் இவ்வகையில் நிர்ணயிக்கப்பட்டவையாகவோ அல்லது ஏனைய வகைகளில் வகைப்படுத்தப்படாதவையாகும். முதலீடு முதிர்வடைந்தாலோ அல்லது அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் போது 12 மாதங்களிற்கிடையில் அகற்றப்படுவதற்கு முகாமைத்துவம் கருதினாலன்றி இவை நடைமுறையல்லாச் சொத்துக்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன. விற்பனைக்காக உள்ள நிதிச்சொத்துக்கள் நீண்டகால பட்டியலிடப்படாத மூலதன முதலீடுகளை உள்ளடக்குகின்றன.

**III. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)**

வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் வழிவராத நிதிச் சொத்துக்களாகும். இவை நிர்ணயிக்கப்பட்ட அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளாவதுடன் முதிர்வு நிர்ணயிக்கப்பட்டவையாகும். சாதகமான கருத்தையும் முதிர்வு வரை அவற்றை அதிகாரசபை வைத்திருப்பின் முதலீடுகள் வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

நடைமுறை அல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்ட முதலீடுகள் அறிக்கைக் காலப்பகுதியின் முடிவின் பின்னர் முதிர்வுக் காலப்பகுதி 12 மாதங்களுக்கு மேற்பட்டாலன்றி நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்படும். இவ்வகைப்படுத்தலில் நியமிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களில் அதிகாரசபை தற்போது முதலீட்டைக் கொண்டுள்ளது.

### 1.4.2 ஏற்பிசைவும் ஆரம்ப அளவீடும்

கடன்கள் மற்றும் பெறவேண்டியவையாக வகைப்படுத்தப்படும் நிதிச் சொத்துக்கள் அதிகாரசபை கொடுக்கல் வாங்கலை ஆரம்பிக்கும் திகதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஏனைய நிதிச்சொத்துக்கள் நிதிக் கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு ஓர் தரப்பாக அதிகாரசபை உள்ளாகும் வர்த்தகத் திகதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஓர் நிதிச்சொத்து அதன் நியாயப் பெறுமதி கூட்டப்பட்டு ஆரம்பத்தில் அளவிடப்படுவதுடன் நியாயப்பெறுமதியில் அல்லாத சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தில் நேரடியாகப் பெறப்படும் கொடுக்கல் வாங்கல் கிரயங்களில் அளவிடப்படுகின்றன.

நிதிச் சொத்துக்களிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள் பெறுவனவு உரிமைகள் முடிவடைகையில் அல்லது மாற்றப்படுகையிலும் அதிகாரசபை பாரியளவில் சகல இடர்களையும் நிதிச்சொத்துக்களின் உரிமையின் அன்பளிப்பையும் மாற்றியிருப்பின் நிதிச்சொத்துக்கள் அடையாளமிடப்படாது விடப்படுகின்றன..

### 1.4.3 அடுத்து மேற்கொள்ளப்பட்ட அளவீடுகள்

#### ஐ. கடன்களும் பெறவேண்டியவைகளும்

ஆரம்ப ஏற்பிசைவை அடுத்து, கடன்களும் பெறவேண்டியவைகளும் ஆக்கபூர்வமான வட்டி முறையில் சேதத்திற்கான ஏற்பாட்டை கழித்து காலக்கழிவு கிரய முறையைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

#### II. விற்பனைக்காக உள்ளவை (AFS)

ஆரம்ப ஏற்பிசைவை அடுத்து, விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்ட பட்டியலிடப்படாத மூலதன முதலீடுகள் அவற்றின் நியாயப் பெறுமதி நம்பகரமான முறைமையில் நடைமுறையில் மதிப்பிடப்பட முடியாமையால் ஏதேனும் சேத இழப்புகள் இருப்பின் அவை கிரயத்திலிருந்து கழிக்கப்பட்டு விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்களாக அளவிடப்படுகின்றன.

#### III. வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் (HTM)

வைத்துக்கொள்ளப்பட்ட முதிர்வு முதலீடுகள் பின்தொடர்ந்து ஆக்கபூர்வமான வட்டி முறையில் காலக்கழிவுக் கிரயத்தில் ஏதேனும் சேத இழப்புகள் இருப்பின் அவை கழிக்கப்பட்டு அளவிடப்படுகின்றன. காலக்கழிவுக் கிரயமானது கொடுக்கல் வாங்கல் கிரயங்களினது கழிவு அல்லது காப்பீட்டுக் கட்டணத்தைக் கருத்திற்கொண்டு கணிப்பிடப்படுகின்றது.

### 1.4.4 நிதிச் சொத்துக்களின் சேதம்

#### ஐ. காலக்கழிவுக் கிரயத்தில் பேணப்படும் சொத்துக்கள்

ஒவ்வொரு அறிக்கைக் காலப்பகுதியின் முடிவிலும் நிதிச் சொத்துக்கள் சேதமடைந்துள்ளதற்காக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய சான்றுகள் இருப்பின் அதிகாரசபையால் மதிப்பீடு செய்யப்படுகின்றன. ஓர்

நிதிச்சொத்து நம்பத்தகுந்த முறையில் மதிப்பிடப்பட முடியுமாயின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் மீது தாக்கம் செலுத்துமாயின் அவ் இழப்பு சம்பவம் (ஓர் 'இழப்பு சம்பவம்') அல்லது சம்பவங்கள் சொத்தில் ஆரம்ப அடையாளம் காணலை அடுத்து நிகழும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சம்பவங்களின் விளைவாக சேதத்தின் நடுநிலைச் சான்று இருந்தால் மாத்திரமே ஓர் நிதிச்சொத்து சேதமடைவதுடன் சேத இழப்புகளும் ஏற்படுகின்றன.

காலக்கழிவு கிரயத்தில் கொண்டுசெல்லப்படும் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் மற்றும் முதிர்வு வரையான முதலீடுகளுக்காக சொத்து கொண்டுசெல்லல் தொகைக்கும் எதிர்கால காசுப்பாய்ச்சல் மதிப்பீட்டு நடைமுறைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு (செலவிடப்படாத எதிர்கால கடன் இழப்புகள் தவிர) நிதிச் சொத்துக்களின் மூல தாக்கல் வட்டி விகிதத்தில் கழிக்கப்பட்டு இழப்புத் தொகை அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகை குறைக்கப்பட்டு இழப்புத் தொகை விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

தொடர்ந்துவரும் காலப்பகுதியின் போது சேத இழப்புகளின் தொகை குறைந்து அக்குறைவு சேதம் ஏற்பிசைவு செய்யப்பட்டதை அடுத்து ஓர் நிகழ்விற்கு பாரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பின் முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்பின் மீட்பு விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

### II. விற்பனைக்காக உள்ளவை (AFS)

நிதிச்சொத்து சேதமடைந்தமைக்கு நடுநிலைச்சான்று உள்ளதா என்பது பற்றி அதிகாரசபை அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் மதிப்பிடுகின்றது. கோரப்படாத மூலதன முதலீடுகளுக்காக அதன் கிரயத்திலும் பார்க்க ஓர் முக்கிய அல்லது தாக்கமான வீழ்ச்சியும் சொத்துக்கள் சேதமுற்றமைக்கு சான்றாக உள்ளன. கோரப்படாத முதலீடுகளுக்கான அத்தகைய சான்று இருக்கையில் சேத இழப்பு நிதிச் சொத்தின் கொண்டுசெல்லல் தொகைக்கும் அதே நிதிச் சொத்திற்கான மீட்பு விகித நடைமுறைச் சந்தையில் கழிவிடப்படும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களின் நடைமுறைப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாக சேத இழப்புத் தொகை அறவிடப்படுகின்றது. அத்தகைய சேத இழப்புக்கள் மீட்கப்படுவதில்லை.

## 1.5 இருப்பு

இருப்பு கிரயம் அல்லது தேறிய கைக்கெட்டும் பெறுமதியில் எது குறைவானதோ அப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளது. முதல் உள் முதல் வெளியே முறையில் கிரயம் நிர்ணயிக்கப்படுகின்றது. இருப்புகள் நுகர்வுப் பொருட்களையும் காகிதாதிகளையும் உள்ளடக்கியனவாகும்.

## 1.6 பெறவேண்டியவைகள்

பெறவேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் (பட்டியல் பெறுமதியில்) ஏற்பிசைவு செய்யப்பட்டு அதனைத் தொடர்ந்து ஆரம்ப பட்டியல் பெறுமதியிலிருந்து நிலுவைகள் குறுகிய காலப்பகுதியில் எதிர்பார்க்கபடுவதால் சேதத்திற்கான ஏற்பாடு கழிக்கப்பட்டே அளவிடப்படுகின்றது. ஆகவே நாணயப் பெறுமதிக் காலம் முக்கியமானதல்ல.
ஒவ்வொரு அறிக்கையிடற் காலப்பகுதியின் முடிவிலும் அதிகாரசபை பெறவேண்டிய இழப்பு நட்டம் ஏற்பட்டுள்ளனவா என்பதற்கு நடுநிலைச் சான்றுகள் உள்ளனவா என்பதை மதிப்பீடு செய்கின்றது. அதிகாரசபையின் கடந்தகாலக் கொடுப்பனவுச் சேகரிப்பு அனுபவங்களையும் தாமதக் கொடுப்பனவுகளின் எண்ணிக்கையையும் பெறவேண்டியவற்றிற்கான இழப்பின் நடுநிலைச் சான்றுகள் உள்ளடக்குகின்றன. இழப்பின் நடுநிலைச் சான்று இருப்பின் மட்டுமே பெறவேண்டியவை இழக்கப்படுவதுடன் இழப்பு நட்டங்களும் ஏற்கப்படுகின்றன. பெறவேண்டியவை இழப்பிற்காக தனித்தனியாக மதிப்பிடப்படுகின்றன.

## 1.7 காசும் காசிற்குச் சமமானவைகளும்

காசுப்பாய்ச்சல் கூற்றில் காசும் காசிற்குச் சமமானவைகளில் கையிலுள்ள காசு, வங்கியில் அழைப்பாக உள்ள வைப்புகள், ஏனைய குறைவான அடிப்படை முதிர்வைக் கொண்ட உயர் திரவத்தன்மையிலான ஏனைய குறுங்கால உயர் திரவத் தன்மையான முதலீடுகளையும் உள்ளடக்கும்.

## 1.8 பங்களிப்பு மூலதனம்

அரசாங்க இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் செலவில் காணப்பட்டு அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட தொகையை உள்ளடக்கிய ஆரம்ப மூலதனத்தை மூலதனம் கொண்டுள்ளது.

## 1.9 நிதிப்பொறுப்புகள்

அதிகாரசபை நிதிப்பொறுப்புகளை ஏனைய நிதிப்பொறுப்புகளாக வகைப்படுத்துகின்றது. அதிகாரசபையின் ஏனைய நிதிப்பொறுப்புகள் செலுத்த வேண்டியவை, அனுமதிப்பத்திரக் கட்டண முற்பெறுவனவு, இரத்தினக்கல் பெறப்பட்ட வைப்புகள் மற்றும் ஏனைய வைப்புகளை உள்ளடக்கும். ஏனைய நிதிப்பொறுப்புகள் ஆரம்பத்தில் நியாயப்பெறுமதியுடன் ஏனைய நேரடி ஏற்கத்தகு கொடுக்கல்வாங்கல் கிரயங்களைச் சேர்த்து ஏற்கப்படுகின்றது. ஆரம்ப ஏற்பைத் தொடர்ந்து நிலுவைகள் குறுகிய காலப்பகுதியில் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதனால் இந்நிதிப் பொறுப்புகள் மூலப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

அதிகாரசபை நிதிப்பொறுப்பை அதன் ஒப்பந்தமயக் கடப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டதும், இரத்துச் செய்யப்பட்டதும் அல்லது முடிவுற்றதும் ஏற்பிசைவு செய்வதில்லை.

## 1.10 நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி

காலப்பகுதிக்கான வரிச் செலவினங்கள் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரியை உள்ளடக்கியுள்ளன. ஏனைய விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும் விடயங்களுடன் தொடர்புபட்டவற்றவை தவிர்ந்த ஏனையவை விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. இவ் விடயத்தில் ஏனைய விபரமான வருமானத்திலும் வரி ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. அதிகாரசபைக்கு உரித்துடைய தொழிற்படு மற்றும் உழைக்கப்பட்ட வரி வருமானத்தில் அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் வலிதான வரிச் சட்டங்களின் அடிப்படையில் நடைமுறை வரிக் கட்டணம் கணிப்பிடப்படுகின்றது. உரிய வகையில் வரி அதிகாரிகளுக்கு செலுத்தப்பட வேண்டியதாக எதிர்பார்க்கப்படும் தொகைகளின் அடிப்படையில் முகாமைத்துவம் ஏற்பாடுகளை உருவாக்குகின்றது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகளுக்கும் அவற்றின் கொண்டுசெல்லல் பெறுமதிகளுக்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகளில் பிற்போடப்பட்ட வரி நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. கணக்கீடு அல்லது வரிக்குட்பட்ட இலாபநட்டங்களைத் தாக்காத கொடுக்கல்வாங்கல் வேளையில் ஓர் வியாபார பிணைப்பு அல்லாத ஓர் கொடுக்கல்வாங்கலில் ஓர் சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப ஏற்பிசைவிலிருந்து உருவாவதாயின் பிற்போடப்பட்ட வரி கணிப்பிடப்படுவதில்லை. பிற்போடப்பட்ட வரி, அறிக்கையிடற் காலப்பகுதியின் முடிவுத் திகதியில் நிலவும் வரி விகிதங்களில் நிர்ணயிக்கப்பட்டு பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்பு தீர்க்கப்படுகையில் அல்லது

தொடர்புபட்ட பிற்போடப்பட்ட வரிச் சொத்து தேறுகையில் பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்கால வரியிடத்தக்க இலாபத்தின் தற்காலிக வேறுபாடுகள் பயன்படுத்தப்படக்கூடிய நிலையின் அளவிற்கே பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.
நடைமுறை வரிச் சொத்துக்களுக்கு எதிராக நடைமுறை வரிப் பொறுப்புகள் எதிரீடு செய்யப்படுவதற்கான உரித்து சட்ட ரீதியாக இருக்குமிடத்தும் அதே வரி அதிகாரங்களால் வருமான வரி விதிப்பனவுகளுடன் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்புபடுகையிலும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புகளும் எதிரீடு செய்யப்படுகின்றன.

## 1.11 ஊழியர் நலன்கள்

### (அ) தெளிவூட்டப்பட்ட பங்களிப்புத் திட்டம்

பின்னைய தொழில் நலனுக்காக அதிகாரசபையால் வேறு ஓர் நிறுவனத்திற்கு வழங்கப்படும் ஓர் நிலையான பங்களிப்புகளைச் செலுத்துவதே தெளிவாக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாகும். அதிகாரசபை எதிர்காலப் பங்களிப்புகளைச் செலுத்துவதற்கு சட்டரீதியான அல்லது தொடர் கடப்பாடுகளைக் கொண்டதல்ல. பங்களிப்புகள் அவை செலுத்தப்பட வேண்டிய நிலைக்குட்படுகையிலேயே ஊழியர் நலன் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

அதிகாரசபை ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் 15% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் 3% இனை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றது.

### (ஆ) தெளிவூட்டப்பட்ட நலன் திட்டம்

தெளிவூட்டப்பட்ட நலன் திட்டம் தொடர்பாக அதிகாரசபையின் கடப்பாடுகள் அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் உள்ளவாறான தெளிவூட்டப்பட்ட நலன் திட்டத்தின் தற்போதைய பெறுமதிக்கே உள்ளன. பணிக்கொடைச் சூத்திரத்தைப் பிரயோகித்து திட்டமிடப்பட்ட அலகுக் கடன் முறையைப் பயன்படுத்தி வருடாந்தம் தெளிவூட்டப்பட்ட நலன் கடப்பாடுகள் அளவிடப்படுகின்றன. தற்போதைய மற்றும் முன்னைய காலப்பகுதியில் ஊழியர்களின் சேவைகளுக்காக அவர்களது உழைப்பின் மதிப்பிடத்தக்க எதிர்கால நலனைக் கழிப்பதன் மூலம் தெளிவூட்டப்பட்ட நலன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்றது.

எடுகோள்கள், நடைமுறைச் சேவைக் கிரயம் மற்றும் வட்டியிலான மாற்றங்களிலிருந்து உருவாகும் இலாபங்களும் நட்டங்களும் விபரமான வருமானக் கூற்றில் அவை உருவாகும் காலப்பகுதியில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஓய்வூதிய நலக் கடப்பாடுகள் வெளிவாரியாக நிதியீட்டப்பட்டவை அல்ல.

**(இ) குறுங்கால ஊழியர் நலன்கள்**

குறுங்கால ஊழியர் நலன் கடப்பாடுகள் ஊழியர்களால் வழங்கப்பட்ட தொடர்புபட்ட சேவைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய ஓர் கழிவிடப்படாத தொகையில் மதிப்பிடப்பட்டு அளவிடப்படுகின்றது.

## 1.12 ஏற்பாடுகளும் நிகழத்தக்க பொறுப்புகளும்

ஏற்பாடுகளும் நிகழத்தக்க பொறுப்புகளும் கடந்த சம்பவமொன்றின் விளைவாக அதிகாரசபை தற்போதைய சட்ட ரீதியான அல்லது தொடர்கடப்பாடுகளை கொண்டிருக்குமாயின் பொருளாதார மூலவளத்தின் வெளிப்பாய்ச்சல் பெரும்பாலும் அதிகாரசபையிலிருந்து தேவைப்படுமாயின் தொகைகளும் நம்பகரமான முறையில் மதிப்பிடப்படக் கூடியதாக உள்ள போது சட்டரீதியான கோரல்களுக்கும் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்களுக்கான ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

தற்போதைய கடப்பாடுகளைத் தீர்க்கக்கூடியதற்கு தேவையான மதிப்பீட்டு செலவினத்தில் ஏற்பாடுகள் தற்போதைய கடப்பாடுகளுடன் தொடர்புபட்ட உறுதியற்ற தன்மை மற்றும் இடர்கள் உள்ளடங்கலாக, அறிக்கைத் திகதியில் நிலவும் கூடியளவில் கிடைக்கப்பெறும் நம்பத்தகுந்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படுகின்றன.

சகல நிகழத்தகு பொறுப்புகளும் மூலவளங்களின் ஓர் வெளிப்பாய்ச்சலுக்கான வாய்ப்பு இருந்தாலன்றி நிதிக்கூற்றுக்களில் ஓர் குறிப்பாக வெளிப்படுத்தப்படுகின்றன.

## 1.13 வருமான ஏற்பிசைவு

வருமானங்கள் பெற்ற அல்லது பெறவேண்டிய அக்கறைகளின் நியாயப் பெறுமதியிலேயே அளவிடப்பட்டு இரத்தினக்கல் அகழ்விற்கான உரிமை விற்பனை, அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், ஏற்றுமதி தரகு மற்றும் வழங்கப்படும் சேவைகள், குறிப்பிடப்பட்ட தேறிய பெறுமதி சேர் வரியையும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித் தொகைகளில் அறவிடப்பட வேண்டிய தொகைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. வருமானமானது நம்பகமான

முறையில் அளவிடப்பட்டு அதிகாரசபைக்கு எதிர்கால பொருளாதார நலன்கள் கிடைக்கப்பெறுவதற்கான வாய்ப்பு இருக்குமாயின் அதிகாரசபையில் வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

அடையாளங்காணக் கூடிய ஒவ்வொரு வகைகளிலான பாரியளவில் வழங்கப்படும் சேவைகளுக்குகாக அதிகாரசபை பின்வரும் வருமான ஏற்பிசைவு செய்யப்பட்ட வகைப்படுத்தலைப் பிரயோகிக்கின்றது.

**(அ) இரத்தினக்கல் அகழ்வு உரிமைகளின் விற்பனை (காணி ஏலவிற்பனை)**

ஒதுக்கப்பட்ட காணித் துண்டுகளில் இரத்தினக்கல் அகழ்விற்கான அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக அறவிடப்படும் கோரப்பட்ட விலையே இரத்தினக்கல் அகழ்வு உரிமைகளின் விற்பனையாகும். இரத்தினக்கல் அகழ்விற்கான அனுமதிப்பத்திர வழங்கல் வேளையிலேயே வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(ஆ) அனுமதிப்பத்திரக் கட்டணம் - வாடிக்கையாளர்கள் மற்றும் அகழ்வாளர் அனுமதிப்பத்திரம்**

அனுமதிப்பத்திரக் கட்டண வாழ்வுக் காலத்திற்கு நேர்கோட்டு அடிப்படையில் வருமானமாக அனுமதிப்பத்திரக் கட்டணம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம் - "பக்கோ" மற்றும் இரத்தினக்கல் ஏலவிற்பனை அனுமதிப்பத்திரம்**

இரத்தினக்கல் அகழ்விற்கான அனுமதிப்பத்திர வழங்கல் வேளையில் அனுமதிப்பத்திரக் கட்டணம் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(ஈ) இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதி தரகுப்பணம் (ஏற்றுமதி சேவைக் கட்டணம் மற்றும் கட்டுநாயக்க வைர நிலைய சேவைக் கட்டணம்)**

ஏற்றுமதிக்காக பொருட்கள் ஆயத்தமான வேளையில் ஏற்றுமதித் தரகுப் பணம் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(உ) சேவைகள்**

கள ஆய்விலிருந்தான வருமானம், கொடுப்பனவுகளின் பெறுகையின் போது ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**(ஊ) வாடகை வருமானம்**

குத்தகைக் காலப்பகுதியின் போது அட்டுறு அடிப்படையில் வாடகை வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(எ) வட்டி வருமானம்**

கிரய முறையைப் பயன்படுத்தி வட்டி வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(ஏ) பங்கிலாப வருமானம்**

கொடுப்பனவின் பெறுவனவு உரிமை ஏற்பட்டதும் பங்கிலாப வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**(ஐ) ஆதன, பொறி உபகரணங்கள் மீதான இலாபமும் நட்டங்களும்**

கொண்டுசெல்லல் தொகையுடன் விற்பனை வருமானத்தை ஒப்பிட்டு கைதவிர்ப்புகளின் இலாப நட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டு விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**1.14 செலவினங்கள்**

அறிக்கைக் காலப்பகுதிக்கான இலாபத்தை ஈட்டுவதற்கான வருமானமாக தொழிற்பாட்டில் ஏற்கப்படும் சகல ஏனைய செலவினங்களுமாகும்.

**1.15 அறிக்கைக் காலப்பகுதியை அடுத்துள்ள சம்பவங்கள்**

அறிக்கைக் காலப்பகுதியின் பின்னரான சகல பொருண்மையான சம்பவங்களும் கருத்திற்கொள்ளப்பட்டு உரியவாறு சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களின் குறித்த குறிப்புகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**1.16 கடப்பாடுகள்**

அறிக்கைக் காலப்பகுதியின் முடிவில் சகல பொருண்மையான கடப்பாடுகளும் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் குறிப்புகளால் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

**1.17 முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகளும் தீர்வுகளும்**

சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவின அளவீடுகள் மற்றும் ஏற்பிசைவு பற்றிய சில நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில், முகாமைத்துவ தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்கின்றது.

I நிதிக்கூற்றுக்கள் மீதான பாரிய தாக்கத்தை விளைவிக்கும் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கையில் பின்வருபவை பாரிய தீர்மானங்களாகும்.

**(அ) பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் ஏற்பிசைவு**

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் ஏற்பிசைவு செய்யப்படும் அளவானது பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் பயன்படுத்தப்படக் கூடிய அளவிற்கு எதிராக உள்ள எதிர்கால வரியிடத்தக்க வருமான நிகழ்விற்கு அமைய ஓர் மதிப்பீட்டின் அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**II** சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவின அளவீடு மற்றும் ஏற்பிசைவு மீதான பாரிய தாக்கத்துடனான மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் பற்றிய தகவல்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

**(அ) பெறுமானத்தேய்விடத்தக்க சொத்துக்களின் பயன்தரு வாழ்க்கைக் காலம்**

ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்விடத்தக்க சொத்துக்களின் பயன்தரு வாழ்க்கைக் காலத்தில் அதன் மதிப்பீட்டை முகாமைத்துவம் மீளாய்வு செய்கின்றது. தகவல் தொழிநுட்ப உபகரணம் மற்றும் சில மென்பொருளின் பயன்பாட்டை மாற்றத்தக்க தொழிநுட்ப வழக்கிழப்புடன் இம் மீதிகளின் நிலையில்லா தன்மைகள் தொடர்புபட்டன.

**(ஆ) தெளிவூட்டப்பட்ட நலன் திட்டம்**

சில எடுகோள்களைப் பயன்படுத்தி கடன் அடிப்படைச் செயற்திட்ட அலகு மீது நிர்ணயிக்கப்பட்ட சில காரணிகளை தெளிவூட்டப்பட்ட நலன் திட்டத்தின் நடைமுறைப் பெறுமதி சார்ந்துள்ளது. கழிவு விகிதம் உள்ளடங்கலாக வரையறுக்கப்பட்ட நலன் திட்டத்திற்கான கடப்பாடுகள் மற்றும் தேறிய கிரயத்தை நிர்ணயிக்கையில் எடுகோள்கள் வெளியிடப்பட்டுள்ளது. இவ் எடுகோள்களிலான ஏதேனும் மாற்றங்கள் தெளிவூட்டப்பட்ட நலன் கடப்பாடுகளின் கொண்டுசெல்லல் தொகையில் தாக்கம் செலுத்தும்.

# தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

## 2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான உரிமை மூலதன மாற்றக் கூற்று

**2**

| | பங்களிப்பு மூலதனம் | இரத்தினக்கல் அகழ்வு நலன்புரி நிதியம் | ஆபரணம் ஆபரண அபிவிருத்தி நிதியம் | இரத்தினக்கல் பரிசூதிய நிதியம் | ஏனைய ஒதுக்கங்கள் | இரத்தினக்கல் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | இரத்தினக்கல் நிறுத்தப்பட்ட வருமானம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2021 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **30,000,000** | **31,739,874** | **76,067,905** | **44,747,558** | **-** | **355,074,648** | **52,945,425** | **985,905,139** | **1,576,480,549** |
| நியாயப் பெறுமதிச் சீராக்கம் | | | | | | - | | | - |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | - | - | - | - | - | 164,372,389 | 164,372,389 |
| ஏனைய விபரமான வருமானம் | - | - | - | - | - | - | - | - | - |
| **மொத்த விபரமான வருமானம்** | | | | | | | | | **1,740,852,938** |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கம் | | | | | | | | | - |
| ஆண்டிற்கான பங்களிப்பு/(பயன்பாடு) | - | | | | - | - | - | - | - |
| சேதத்திற்கான சீராக்கம் | | 2,415,000 | 6,468,913 | 1,847,248 | | | | | 10,731,161 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **30,000,000** | **34,154,874** | **82,536,818** | **46,594,806** | **-** | **355,074,648** | **52,945,425** | **1,150,277,528** | **1,751,584,099** |
| நியாயப் பெறுமதி சீராக்கம் | - | - | - | - | - | - | - | | |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | - | - | - | - | - | 278,232,606 | 278,232,606 |
| ஏனைய ஒட்டுமொத்த வருமானம் | - | - | - | - | - | - | - | - | - |
| **மொத்த விபரமான வருமானம்** | | | | | | | | | **-** |
| முன்னைய ஆண்டுச் சீராக்கம் (குறிப்பு 39) | | | | | | | | | - |
| ஆண்டிற்கான பங்களிப்பு/(பயன்பாடு) | - | | | | - | - | - | - | - |
| சேதத்திற்கான சீராக்கம் | - | 652,150 | 8,161,655 | (1,568,216) | - | 393,473,352 | 127,879,682 | 1,862,465 | 530,461,088 |
| | | | | | | | | | - |
| **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **30,000,000** | **34,807,024** | **90,698,473** | **45,026,590** | **-** | **748,548,000** | **180,825,107** | **1,430,372,599** | **2,560,277,792** |

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை**

**2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்**

| ஆதன, பொறி, உபகரணங்கள் கிரயம் | 2022 சனவரி 01 இல் உள்ளவாறு | சேர்ப்பனவுகள் | மீள்மதிப்பு | சீராக்கங்கள் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|
| **இறையிலாதனம்** | | | | | |
| காணி | 40,374,059 | | | - | 40,374,059 |
| கட்டிடங்கள் | 388,278,233 | 6,261,907.00 | | - | 394,540,140 |
| தளபாடப் பொருத்திகள் | 23,579,122 | 678,550.00 | | - | 24,257,672 |
| தளபாடங்கள் | 22,036,555.78 | 115,065.00 | | - | 22,151,621 |
| அலுவலக உபகரணங்கள் | 25,015,575 | 399,764.00 | | - | 25,415,339 |
| கணனி | 41,869,855 | 8,750,665.00 | | - | 50,620,520 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 60,150,047 | 13,500.00 | | - | 60,163,547 |
| பட்டை தீட்டும் உபகரணங்கள் | 403,475 | - | | - | 403,475 |
| ஆபரண உபகரணங்கள் | 148,200 | - | | - | 148,200 |
| மதிப்பீட்டு உபகரணங்கள் | 173,183,686 | 5,035,000.00 | | - | 178,218,686 |
| இயந்திரங்கள் மற்றும் கெஉடா உபகரணங்கள் | 13,790,342 | - | | - | 13,790,342 |
| மோட்டார் வாகனங்கள் | 118,672,998 | 210,000.00 | 129,450,000 | 118,672,998 | 132,116,499 |
| மோட்டார் சைக்கிள் | 100,000 | | 85,000 | 100,000 | 85,000 |
| துவிச்சக்கரம் | 37,334 | - | | - | 37,334 |
| நூலகப் புத்தகங்கள் | - | | | - | - |
| கூறாக்கல்கள் | 9,620,694 | - | | - | 9,620,694 |
| கூறாக்கல்கள் - நடமாடும் ஆய்வுகூடம் | 2,456,500 | - | | - | 2,456,500 |
| **குத்தகை ஆதனம்** | - | - | | - | - |
| காணி | 159,205 | | | - | 159,205 |
| | **919,875,880** | **21,464,451** | **129,535,000** | **118,772,998** | **952,102,334** |

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

## 2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள

| பெறுமானத்தேய்வு | 2022 சனவரி 01 இல் உள்ளவாறு | ஆண்டிற்கான விதிப்பனவுகள் | | சீராக்கங்கள் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|
| ***இறையிலாதனம்*** | | | | | |
| கட்டிடங்கள் | 62,358,560.67 | 7,866,785 | | | 70,225,345.67 |
| தளபாடப் பொருத்திகள் | 17,152,660.06 | 1,157,604 | | - | 18,310,264 |
| தளபாடங்கள் | 13,737,709.51 | 1,145,182 | | - | 14,882,892 |
| அலுவலக உபகரணங்கள் | 19,551,253.50 | 1,357,668 | | - | 20,908,922 |
| கணனி | 31,066,073.09 | 4,137,846 | | - | 35,203,919 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 30,040,271.48 | 4,877,363 | | - | 34,917,634 |
| பட்டை தீட்டும் உபகரணங்கள் | 403,475.00 | - | | - | 403,475 |
| ஆபரண உபகரணங்கள் | 148,200.00 | | | - | 148,200 |
| மதிப்பீட்டு உபகரணங்கள் | 88,998,765.64 | 15,397,849 | | - | 104,396,615 |
| இயந்திரங்கள் மற்றும் கெஉடா உபகரணங்கள் | 9,705,670.80 | 549,798 | | - | 10,255,469 |
| மோட்டார் வாகனங்கள் | 116,560,282.49 | 12,378,418 | - | (117,017,680) | 11,921,020 |
| மோட்டார் சைக்கிள் | 100,000.00 | 7,801 | | (100,000) | 7,801 |
| துவிச்சக்கரம் | 37,334.00 | | | - | 37,334 |
| நூலகப் புத்தகங்கள் | - | | | - | - |
| கூறாக்கல்கள் | 9,332,101.76 | 127,372 | | - | 9,459,474 |
| கூறாக்கல்கள் - நடமாடும் ஆய்வுகூடம் | 2,456,500.00 | | | - | 2,456,500 |
| | **401,648,858** | **49,003,686** | **(92,199)** | **(117,117,680)** | **333,534,864** |

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை**

**2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்**

| தேறிய கொண்டு செல்லல் பெறுமதி | 2022 சனவரி 01 இல் உள்ளவாறு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | சீராக்கங்கள் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| ***இறையிலாதனம்*** | | | | |
| காணி | 40,374,059.00 | 40,374,059.00 | | 40,374,059 |
| கட்டிடங்கள் | 324,314,794.74 | 325,919,672.74 | | 325,682,152 |
| தளபாட பொருத்திகள் | 5,947,407.89 | 6,426,461.89 | | 5,965,349 |
| தளபாடங்கள் | 7,268,729.27 | 8,298,846.27 | | 4,833,840 |
| அலுவலக உபகரணங்கள் | 4,506,417.29 | 5,464,321.29 | | 6,937,733 |
| கணனி | 15,416,600.89 | 10,803,781.89 | | 2,776,617 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 25,245,912.12 | 30,109,775.12 | | 33,585,262 |
| பட்டை தீட்டும் உபகரணங்கள் | - | - | | - |
| ஆபரண உபகரணங்கள் | - | - | | - |
| மதிப்பீட்டு உபகரணங்கள் | 73,822,070.87 | 84,184,919.87 | | 61,432,012 |
| இயந்திரங்கள் மற்றும் கெவுடா உபகரணங்கள் | 3,534,873.19 | 4,084,671.19 | | 2,593,419 |
| மோட்டார் வாகனங்கள் | 117,738,978.36 | 2,112,715.36 | | 3,451,881 |
| மோட்டார் சைக்கிள் | 77,199.00 | - | | - |
| துவிச்சக்கரம் | - | - | | - |
| நூலகப் புத்தகங்கள் | - | - | | - |
| கூறாக்கல்கள் | 161,219.94 | 288,591.94 | | - |
| கூறாக்கல்கள் - நடமாடும் ஆய்வுகூடம் | - | - | | - |
| ***குத்தகை ஆதனம்*** | | | | |
| காணி | 159,205.00 | 159,205.00 | | 159,205 |
| | **618,567,467.56** | **518,227,022** | | **487,791,527** |
| **சேதத்திற்கான ஏற்பாடு** | (2,045,756.00) | (3,907,223) | | (3,431,368) |
| | **616,521,711.56** | **514,319,799** | | **484,360,159** |

கணக்காய்வாளரின் பரிந்துரையின் படி, மோட்டார் வாகனங்கள் மீள்பெறுமதியிடப்பட்டுள்ளது. மீள்மதிப்பிடப்பட்ட மோட்டார் வாகனம் ரூபா 129,450,000.00 ஆகக் காணப்பட்டது.

பெலிதெனிய காணி .1095 ஹெக். காணி, பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சினால் 07.07.2017 ஆம் திகதியிடப்பட்ட 2026/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் மீள் உரித்தளிக்கப்பட்டது.

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை**

**2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்**

**4. குத்தகைக் காணி (காணியைப் பயன்படுத்தும் உரிமை)**

காணியைப் பயன்படுத்தும் உரிமை குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதிக்குச் சமனான தொகையில் அளவிடப்பட்டு ஆரம்பத்தில் ஏற்கப்பட்ட கூடுதல் முறைக் கடன் பெறு விகிதத்தைப் பயன்படுத்தி கழிவிடப்பட்டு குத்தகைக் காலத்திற்கு காலக்கழிவிடப்படுகின்றது.

**காணியைப் பயன்படுத்தும் உரிமை கொண்டுசெல்லும் பெறுமதி**

| | 2022 | 2021 |
|---|---|---|
| **மூலதனமாக்கப்பட்ட தொகை** | | |
| **சனவரி 01 இல் உள்ளவாறு** | **70,909.00** | **70,909** |
| ஏற்கப்பட்ட ஆரம்ப கிரயம் | - | - |
| ஆண்டின் போது மூலதனமாக்கப்பட்டவை | - | - |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | **70,909.00** | **70,909** |
| **காலக்கழிவு** | | |
| **சனவரி 01 இல் உள்ளவாறு** | **59,094.00** | **56,730** |
| ஆண்டின் போது காலக்கழிவு | 2,364.00 | 2,364 |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | **61,458.00** | **59,094** |
| **கொண்டுசெல்லும் தொகை** | **9,451.00** | **11,815** |

காணியின் குத்தகை உரிமை 30 ஆண்டுகளுக்காக 1997 நவம்பர் முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மாற்றற் காலப்பகுதியில் (2011 சனவரி 01) ஏற்பிசைவு செய்யப்பட்ட காணிப் பயன்பாட்டு உரிமை 2026 நவம்பர் வரையுள்ள குத்தகைக் காலப்பகுதிக்கு காலக்கழிவு செய்யப்பட்டிருந்தது.

| | | 2022 திசெம்பர் 01 இல் உள்ளவாறு | சேர்ப்பனவுகள்/ அகற்றல்கள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது |
|---|---|---|---|---|
| **5.** | **அருவகச் சொத்துக்கள்** | | | |
| **5.1** | **கிரயத்தில்** | | | |
| | கணனி மென்பொருள் | 2,677,306.12 | - | 2,677,306 |
| | **மொத்தம்** | **2,677,306.12** | **-** | **2,677,306** |

| | | 2022 திசெம்பர் 01 இல் உள்ளவாறு | ஆண்டிற்கான விதிப்பனவுகள் | 2021 திசெம்பர் 01 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| **5.2** | **காலக்கழிவு** | | | |
| | கணனி மென்பொருள் | 2,677,306.12 | | 2,677,306 |
| | **மொத்தம்** | **2,677,306.12** | | **2,677,306** |

| | | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|
| **5.3** | **தேறிய கொண்டுசெல்லும் பெறுமதி** | | |
| | கணனி மென்பொருள் | - | - |

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| **6.** | **பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் /(பொறுப்புகள்)** | | |
| | **சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **24,368,130.77** | **24,644,383.96** |
| | சீராக்கம் | 2,229,209.51 | (276,253.19) |
| | **திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | **26,597,340.28** | **24,368,131** |

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை**

**2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்**

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| **7** | **ஏனைய சொத்துக்கள்** | | |
| | பட்டை தீட்டப்படாத கற்களும் செயற்கைச் சேர்மக் கற்கள் | 96,682.58 | 96,682.58 |
| | கண்காட்சி இரத்தினக்கல் | 765,219,317.42 | 371,842,648.00 |
| | இரத்தினக்கற் முற்பணக் கொடுப்பனவு மற்றும் இரத்தினக்கல் நிறுவகம் | 200,000.00 | 200,000.00 |
| | | **765,516,000.00** | **372,139,331** |
| | சேதங்களுக்கான ஏற்பாடு | (200,000.00) | (200,000.00) |
| | | **765,316,000.00** | **371,939,331** |

| | | | 2022 | 2021 |
|---|---|---|---|---|
| **8** | **விற்பனைக்காக உள்ளவை (AFS)** | | | |
| | பட்டியல் படுத்தப்படாத முதலீடுகள் | **(குறிப்பு 8.1)** | | |
| | | | **1,200,010** | **1,200,010** |

| **8.1 பட்டியல் படுத்தப்படாத முதலீடுகள்** | **பங்குகளின் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|
| வரையறுக்கப்பட்ட அஸோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் | 20,000 | 200,000.00 | 200,000.00 |
| வரையறுக்கப்பட்ட ஜீ.எஸ்.எம்.பீ. டெக்னிகல் சேவிசஸ் (தனி) | 100,000 | 1,000,000.00 | 1,000,000.00 |
| எல்ஜீஎல் (தனி) வரை. | 1 | 10.00 | 10.00 |
| | | **1,200,010.00** | **1,200,010** |

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| 9 | **இருப்புகள்** | | |
| | நுகர்வுப் பொருட்கள் இருப்பு | 3,223,796.31 | 2,905,391.07 |
| | இரத்தினக்கற்கள் - கெவுடா நிலையம் | 183,547.54 | 183,547.54 |
| | அச்சிடலும் காகிதாதி இருப்பும் | 2,220,237.29 | 1,003,636.00 |
| | | **5,627,581.14** | **4,092,575** |

| | | | |
|---|---|---|---|
| 10 | **பெறவேண்டியவைகள்** | | |
| | பெறவேண்டியவைகள் | 164,085,403.16 | 85,984,392.83 |
| | சேதங்களுக்கான ஏற்பாடு | (1,407,972.00) | (1,407,972.00) |
| | | **162,677,431.16** | **84,576,421** |
| | முற்கொடுப்பனவுகள் | 29,250,359.56 | 11,043,081.27 |
| | | **191,927,790.72** | **95,619,502** |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | **முதிர்வு வரையுள்ள முதலீடுகள் (எச்ரீஎம்)** | | | |
| | **காலக் கிரயத்திலுள்ள கொண்டுசெல்லும் தொகை** | | | |
| | திறைசேரி உண்டியல்கள் - | இலங்கை வங்கி | **829,090,562.97** | **608,722,190** |
| | - | மக்கள் வங்கி | **818,492,706.49** | **589,902,805** |
| | | | **1,647,583,269.46** | **1,198,624,995** |

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| 12 | **வைப்புகளும் முற்பணங்களும்** | | |
| | பொது வைப்புகள் | 175,998,861.39 | 178,455,221.39 |
| | ஏனையவை | 30,725.00 | 30,725.00 |
| | பாதுகாப்பு வைப்புகள் | 61,500.00 | 61,500.00 |
| | | **176,091,086.39** | **178,547,446.39** |
| | சேதங்களுக்கான ஏற்பாடு | (1,433,947.00) | (1,433,947.00) |
| | | **174,657,139.39** | **177,113,499** |

**13 ஊழியர் கடன்களும் முற்பணங்களும்**

| | | |
|---|---|---|
| முற்பணங்கள் | 77,562.68 | 191,315.01 |
| கொடுப்பனவற்ற லீவுகள் | 119,944.79 | 143,128.73 |
| வாகனக் கடன் | 4,574.34 | 4,574.34 |
| புடவைக் கடன் | 64,000.24 | 58,000.24 |
| இடர் கடன்கள் | 17,628,717.92 | 14,679,985.05 |
| | **17,894,799.97** | **15,077,003** |

**14 ஏனைய நிதிச் சொத்துக்கள் - நிலையான வைப்புக்கள்**

| | | |
|---|---|---|
| - இலங்கை வங்கி | 497,763,923.16 | 472,290,195.05 |
| - மக்கள் வங்கி | 348,602,425.04 | 327,820,813.21 |
| - எச்டீஎப்சீ வங்கி | 87,909,088.85 | 80,708,325.67 |
| | **934,275,437.05** | **880,819,333.93** |

**15 காசும் காசுக்குச் சமமானவையும்**

| | | |
|---|---|---|
| காசு மாற்ற மீதிகள் | 1,587,333.33 | 1,344,082.40 |
| காசும் வங்கி மீதியும் - இல. ரூபா | 115,435,547.67 | 71,948,422.14 |
| வங்கி மீதிகள் - வெளிநாட்டு நாணயம் | 5,811,019.74 | 11,615,905.50 |
| | **122,833,900.74** | **84,908,410** |

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை**

**2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்**

**16 பங்களிப்பு மூலதனம்**

அரச இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் செலவில் காணப்பட்டு அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட தொகையை உள்ளடக்கிய ஆரம்ப மூலதனத்தை மூலதனம் பிரதிபலிக்கின்றது.

**17 இரத்தினக்கல் அகழ்வு நலன்புரி நிதியம்**

2008 வரை இரத்தினக்கல் அகழ்வாளர்களிடமிருந்தும் அதன் பின்னர் 1993 இன் 50 ஆம் இலக்க இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பகுதி I 14 (என்) இன் படி, இரத்தினக்கல் கைத்தொழிலில் தொழில் புரியும் ஊழியர்களை உயிர் ஆபத்திலிருந்து அதிகாரசபையைக் காப்பாற்றும் படி குறிப்பிடப்பட்டுள்ளமையால் 2015 இலிருந்து நிதி சேகரிக்கப்பட்டுவருகின்றது.

**18 ஆபரண அபிவிருத்தி நிதியம்**

ஆபரணக் கைத்தொழிலில் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக 2007 பாதீட்டுப் பரிந்துரைப்பிற்கமைய ஆபரணத் தயாரிப்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்படும் ரூபா 5000 வருடாந்தப் பதிவுக் கட்டணத்தை இது குறிக்கின்றது. ஆபரணக் கைத்தொழில் நடவடிக்கைகளின் விருத்திக்காக நிதி பயன்படுத்தப்படுகின்றது.

**19 இரத்தினக்கல் பரிசூதிய நிதியம்**

1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பகுதி IV 52 இன் தேவைப்பாட்டிற்கமைய சட்ட மீறல்களுக்காக குறித்த தரப்பினருக்கு விதிக்கப்படும் தண்டப்பணத்தையும் அதிகாரசபையால் பெறப்படும் தண்டப்பணத்தையும் செலவு வைக்கும் தண்டப்பண நிதியத்தை இது பிரதிநிதித்துவம் செய்கின்றது. சபைச் சுற்றறிக்கை 824 இன் அறிவுறுத்தல்களுக்கமைய தண்டப்பணம் சுற்றிவளைப்புக் குழுவிற்கும் ஊழியர்களுக்கும் வெகுமதிகளை வழங்குவதற்காக இந் நிதியம் பேணப்படுகின்றது.

**20 இரத்தினக்கல் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்**

கண்காட்சியில் பயன்படுத்தப்பட்ட இரத்தினக்கற்களின் மீள்மதிப்பீட்டு மிகையை இது பிரதிநிதித்துவம் செய்கின்றது.

**21 மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்**

காணி கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டு மிகையை இம் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் குறிக்கின்றது. குறித்த மீள்மதிப்பீட்டுச் சொத்துக்கள் கைதவிர்க்கப்படுகையில் மீள் மதிப்பீட்டு மிகையின் பகுதி பகிரப்படாத உழைப்பிற்கு மாற்றப்படுகின்றது.

**22 ஓய்வூதிய நலக் கடப்பாடுகள்**

| | 2022 | 2021 |
|---|---|---|
| **சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **45,753,330.68** | **49,841,554.40** |
| விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட செலவினங்கள் குறிப்பு 22.1 | 13,631.55 | 960,313.78 |
| 2021 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட நலன்கள் | (9,428,191.50) | (5,048,537.50) |
| 2021 ஆம் ஆண்டிற்கான சீராக்கங்கள் | - | - |
| **திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | **36,338,770.73** | **45,753,330.68** |

**22.1 விபரமானவருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட செலவினங்கள்**

| | | |
|---|---|---|
| வட்டி கிரயம் | 5,444,646.35 | 4,834,630.80 |
| ஆண்டிற்கான கட்டணம் | 1,930,028.28 | 2,508,880.40 |
| எடுகோள்களின் மாற்றங்களிலிருந்து உருவாகும் (இலாபம்) / நட்டம் | (7,361,043.08) | (6,383,197.42) |
| | **13,631.55** | **960,313.78** |

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை**

**2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்**

ஓய்வூதிய நலக்கடப்பாடுகளை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட முகாமைத்துவத்தின் சிறந்த மதிப்பீட்டு மாறிகளை அடிப்படையாகக் கொண்டு இவ் எடுகோள்கள் அதிகாரசபையால் விஸ்தரிக்கப்பட்டவையாகும்.

**பயன்படுத்தப்பட்ட முக்கிய எடுகோள்கள் பின்வருமாறாகும்.**

| | | |
|---|---|---|
| கழிவு வீதம் [%] | 12 | 10 |
| எதிர்கால சம்பள உயர்வுகள் சராசரி – சம்பளம் [%] | 1.3 | 1.3 |
| பதவியணி புரள்வுக் காரணி [%] | 2.5 | 2.5 |
| ஓய்வு பெறும் வயது [ஆண்டுகள்] | 60 | 60 |

ஆண்டின் ஆரம்பத்தில் கழிவு வீதம் 12% ஆகக் கணிப்பீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 84 ஆம் பந்தியில் பரிந்துரைக்கப்பட்டதன் படி, தற்போது நிலவும் நெருக்கடி காரணமாக விதிவிலக்கான உயர் சந்தை வீதத்தை அகற்றுவதற்காக இது எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| 23 | **குத்தகைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் பொறுப்பு** | | |
| | **மொத்தப் பொறுப்பு** | | |
| | **சனவரி 01 இல் உள்ளவாறு** | **296,825.00** | **336,313.00** |
| | ஆண்டின் போது இனங்காணப்பட்டவை | - | - |
| | ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | (39,488.00) | (39,488.00) |
| | **திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | **257,337.00** | **296,825** |
| | **நிதிக் கிரயம்** | | |
| | **சனவரி 01 இல் உள்ளவாறு** | **292,417.00** | **331,125.00** |
| | ஆண்டின் போது இனங்காணப்பட்டவை | **-** | **-** |
| | ஆண்டின் போது விபரமான வருமானத்தில் இனங்காணப்பட்ட நிதிக் கிரயம் | | (38,708.00) |
| | **எதிர்வரும் காலத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிக் கிரயம்** | **292,417.00** | **292,417** |
| | **திசெம்பர் 31 இல் உள்ளவாறானது தேறிய பொறுப்பு** | **35,080.00** | **(4,408)** |

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| **23.1** | **பொறுப்புகளின் வகைப்படுத்தல்** | | |
| | **ஒரு வருடத்திற்குள் கொடுப்பனவிற்கான தீர்வுகள்** | | |
| | மொத்தப் பொறுப்பு | 59,900.00 | 59,900.00 |
| | எதிர்காலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிக் கிரயம் | (58,232.00) | (58,232.00) |
| | | **1,668.00** | **1,668** |
| | **ஒரு வருடத்திற்கு மேல் கொடுப்பனவிற்கான தீர்வுகள்** | | |
| | **இரண்டு முதல் ஐந்து வருடத்திற்குட்பட்ட கொடுப்பனவிற்கான தீர்வுகள்** | | |
| | மொத்தப் பொறுப்பு | 236,925.00 | 236,925.00 |
| | எதிர்காலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிக் கிரயம் | (236,925.00) | (234,183.00) |
| | | **-** | **2,742** |
| | **ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கொடுப்பனவிற்கான தீர்வுகள்** | | |
| | மொத்தப் பொறுப்பு | 3,410.75 | - |
| | எதிர்காலத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிக் கிரயம் | - | - |
| | | **3,410.75** | **-** |
| | ஒரு வருடத்திற்கு மேல் கொடுப்பனவிற்கான மொத்த தீர்வுகள் | **3,410.75** | **2,742** |
| | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த தேறிய பொறுப்பு** | **5,078.75** | **4,410** |

| | | | |
|---|---|---|---|
| **24.** | **செலுத்த வேண்டியவைகள்** | | |
| | கடன்கொடுத்தோர் | 187,039,135.64 | 188,791,845.82 |
| | ஒப்பந்தக்காரர்களிடமிருந்தான பிடிமானப்பணம் | 22,611,037.52 | 13,608,477.56 |
| | 40% எல்ஆர்சீ மற்றும் காணி | | |
| | உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய காணி | | |
| | ஏலவிற்பனையிலிருந்தான விற்பனை வருமானம் | | |
| | ஏனையவை | 76,501,507.78 | 11,150,657.67 |
| | | **286,151,680.94** | **213,550,981** |

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை**

**2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்**

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| **25** | **பெறப்பட்ட வைப்புகளும் முற்பணங்களும்** | | |
| | ஊழியர்களின் பிணை வைப்புகள் | 111,500.00 | 61,500.00 |
| | நுகர்வோரிடமிருந்தான முற்பணம் | 15,896.26 | 15,896.26 |
| | ஊழியர்களிடமிருந்தான மிகை அறவீடுகள் | - | 30,088.67 |
| | காணிப் பிணக்கு வைப்புகள் | 116,136,877.40 | 101,209,759.14 |
| | கேள்வி வைப்புகள் | 9,713,580.00 | 9,567,680.00 |
| | உலக வர்த்தக மையத்திலுள்ள விற்பனைக் கூட உரித்திற்கான வைப்பு | 6,035,980.68 | 4,555,138.70 |
| | இரத்தினக்கல் நூதனசாலை நிதியம் | 125,997.00 | 125,997.00 |
| | ஏற்றுமதி தரகு வைப்புகள் | 280,000.00 | 280,000.00 |
| | மருத்துவ திட்ட நிதியம் | 460,993.29 | - |
| | | **132,880,824.63** | **115,846,060** |

| | | | |
|---|---|---|---|
| **26** | **செலுத்த வேண்டிய நியதிச் சட்டக் கொடுப்பனவுகள்** | | |
| | கூட்டிணைந்த வரி (குறிப்பு 26.1) | 92,558,964.60 | 35,861,818.73 |
| | பெறுமதி சேர் வரி | 1,546,626.73 | 6,184,401.78 |
| | 2.5% பிடித்துவைத்த இரத்தினக்கல் ஏலவிற்பனை வரி | 525,030,110.66 | 347,017,042.23 |
| | முத்திரைக் கட்டணங்கள் | 2,269,782.41 | 3,447,237.41 |
| | எஸஎஸ்சீஎல் வரி | 596,631.04 | - |
| | | **622,002,115.44** | **392,510,500** |

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| 26.1 | **கூட்டிணைந்த வரி** | | |
| | சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 35,861,818.73 | 14,415,036.00 |
| | ஆண்டிற்கான நடைமுறை வரி | 94,670,212.20 | 37,973,065.73 |
| | ஆண்டின் போதான கொடுப்பனவு | (32,588,746.00) | (10,480,089.00) |
| | - கடந்த ஆண்டுப் பொறுப்பின் தீர்ப்பனவு | | |
| | சுய மதிப்பீட்டுக் கொடுப்பனவு | (6,000,000.00) | (6,000,000.00) |
| | வரிக்கடன்களுடன் பதிவழிக்கப்பட்டவை - | - | - |
| | - ஈஎஸ்சீ | | |
| | - பிடித்து வைத்தல் வரி | - | - |
| | - பெயரளவு வரி | - | - |
| | கடந்த ஆண்டின் (குறை).'. மிகை ஏற்பாட்டின் சீராக்கம் | 615,679.67 | (46,194.00) |
| | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | **92,558,964.60** | **35,861,819** |

| | | | |
|---|---|---|---|
| 27 | **ஏற்பாடுகளும் அட்டுறு செலவினங்களும்** | | |
| | சட்டக் கொடுப்பனவுகளிற்கான ஏற்பாடு | - | - |
| | அட்டுறு செலவினங்கள் | 52,474,515.31 | 78,328,415.66 |
| | | **52,474,515.31** | **78,328,416** |

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

## 2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| 28 | **வருமானம்** | | |
| | காணி ஏலவிற்பனை – அரச காணி | 38,540,000.00 | 2,639,395.43 |
| | காணி ஏலவிற்பனை – எல்ஆர்சீ | 36,173,675.90 | 560,000.00 |
| | சேவை மற்றும் மேன்முறையீட்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் | 982,100.00 | 642,980.00 |
| | இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரக் கட்டணம் | 41,090,675.00 | 36,208,018.00 |
| | விற்பனையாளர் அனுமதிப்பத்திரக் கட்டணம் | 71,864,937.00 | 42,848,080.60 |
| | அன்பளிப்புகள் மற்றும் மாதிரிகளுக்கான சேவைக் கட்டணம் | 192,000.00 | 360,000.00 |
| | இரத்தினக்கல் ஆபரண ஏற்றுமதி சேவைக் கட்டணம் | 246,425,833.89 | 141,895,336.04 |
| | பட்டை தீட்டல் அனுமதிப்பத்திரக் கட்டணம் | 392,135.00 | 411,346.00 |
| | சேவை கட்டணங்கள் - கெவுடா ஏற்றுமதி | 5,940,738.84 | 6,315,111.32 |
| | எல்டீஓ காணி / கனியவள வரி | 5,480,000.00 | 4,436,750.00 |
| | தண்டப் பணத்திலிருந்தான வருமானம் | 15,804,209.48 | 10,648,707.66 |
| | இரத்தினக் கல் ஏலவிற்பனை உரிமை ஆவணம் | 1,470,500.00 | 946,000.00 |
| | இரத்தினக் கல் பரிசோதனைக் கட்டணம் | 9,220,797.03 | 4,790,918.00 |
| | மதிப்பீட்டு அலுவலகத்திலிருந்தான வருமானம் | 20,845,410.43 | 7,525,480.37 |
| | அனுமதிப்பத்திரப் பிரதிக் கட்டணம் | 68,570.00 | 43,290.32 |
| | சேவைக் கட்டணம் - கட்டுநாயக்க வைர நிலையம் | 15,872,968.31 | 8,448,400.00 |
| | இரத்தினக்கல் பொதி அகற்றலிலிருந்தான வருமானம் | 2,749,109.14 | 2,583,103.81 |
| | சுற்றாடல் பாதுகாப்பு | 1,080,000.00 | - |
| | பெக்கோ சேவைக் கட்டணம் | 40,036,400.00 | 39,345,000.00 |
| | பரிசோதிப்புக் கட்டணம் | 45,391,200.00 | 40,511,800.00 |
| | நிற மற்றும் 3 டீ அட்டைகள் | 5,577,400.00 | 3,091,800.00 |
| | இரத்தினக் கல் விற்பனை | 54,666,767.26 | 19,126,585.14 |
| | இரத்தினக்கல் அகழ்வு விற்பனை | 7,714,500.00 | 8,980,350.00 |
| | கிரவல் கொண்டுசெல்வதற்கான அனுமதி வருமானம் | 1,682,600.00 | 607,340.00 |
| | இரத்தினக்கல் கொண்டு செல்லல் கட்டண வருமானம் | 9,500.00 | 498,168.77 |
| | பொறியியலாளர்களிற்கான ஆய்வுக் கட்டணம் | 17,039,000.00 | 15,963,200.00 |
| | செயற்திட்ட வருமானம் | - | 125,475,200.00 |
| | விசா கட்டண வருமானம் | 1,248,555.00 | 985,466.50 |
| | இரத்தினக்கல் அகழ்விற்கான இயந்திரம் | 1,423,050.00 | - |
| | | **688,982,632.24** | **525,887,828** |

## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

## 2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| **29** | **ஏனைய வருமானம்** | | |
| | நானாவித வருமானம் | 1,400,670.14 | 583,765.32 |
| | உ.வ.மைய மற்றும் இரத்தினபுரி விற்பனைக் கூடங்கள் | - | 13,343,831.25 |
| | புத்தக விற்பனைகள் | 43,800.00 | 22,200.00 |
| | பங்கிலாபங்கள் | 600,000.00 | - |
| | வாடகை வருமானம் | 9,225,648.65 | 3,779,423.94 |
| | ஏலவிற்பனைப் பொருட்களிலிருந்தான வருமானம் | - | 2,576,208.00 |
| | காப்புறுதி முகவர்களிடமிருந்தான வருமானம் | 861,754.95 | 713,719.68 |
| | கண்காட்சிச் செலவினங்கள் - வெளிநாடு (அறவிடப்பட்டது) | - | 700,000.00 |
| | | **12,131,873.74** | **21,719,148** |

| | | 2022 | 2021 |
|---|---|---|---|
| **30** | **நிர்வாகச் செலவினங்கள்** | | |
| | சந்தாக்கட்டணம் | 1,148,347.64 | 1,278,565.91 |
| | உபசாரிப்பு (உள்ளூர்) | 2,200,541.84 | 1,732,568.51 |
| | தொலைபேசிக் கட்டணங்கள் | 4,309,213.14 | 4,074,472.91 |
| | அஞ்சல் மற்றும் முத்திரைகள் | 1,762,413.06 | 931,945.16 |
| | இணையதளக் கட்டணங்கள் | 4,581,090.74 | 4,511,366.45 |
| | சபை அங்கத்தவர்களின் செலவினங்கள் | 1,436,000.00 | 1,123,112.65 |
| | வாடகை | 59,022,197.70 | 23,374,414.31 |
| | மின்சாரம் | 9,681,534.40 | 7,867,468.21 |
| | இறைகளும் வரிகளும் | 1,040,335.75 | 1,128,590.75 |
| | பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் | 71,910.00 | 38,350.00 |
| | நீர் வரி மற்றும் கட்டணங்கள் | 1,156,062.79 | 959,417.92 |
| | விளம்பரம் | 758,542.50 | 954,820.00 |
| | போக்குவரத்து | 760,094.76 | 1,126,836.33 |
| | காப்புறுதி | 1,498,659.21 | 1,420,772.04 |
| | சட்டக் கட்டணங்கள் | 2,774,244.00 | 2,683,906.50 |
| | ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணங்கள் | 1,200,000.00 | 1,049,260.00 |
| | அளவைக் கட்டணங்கள் | 437,528.44 | - |
| | முகாமைத்துவ ஆலோசனை | 21,500.00 | 40,025.00 |

| | | |
|---|---|---|
| கட்டிடப் பராமரிப்பு | 18,857,687.62 | 12,549,804.12 |
| உபகரணப் பராமரிப்பு | 7,152,537.50 | 2,613,873.69 |
| பாதுகாப்புச் சேவைகள் | 15,530,200.00 | 19,862,720.00 |
| கருத்தரங்குகளும் பயிற்சியும்(உள்ளூர் ) | 1,028,284.96 | 88,924.84 |
| கருத்தரங்குகளும் பயிற்சியும் (வெளியூர்) | 1,396,318.23 | 320,000.00 |
| திடீர் சுற்றிவளைப்புச் செலவினங்கள் | 313,790.00 | 223,610.00 |
| பொது ஏலவிற்பனைச் செலவினங்கள் | 1,665,607.63 | 693,212.08 |
| அன்பளிப்புகள் | - | 200,000.00 |
| நுகர்வுச் சொத்துக்கள் | 204,573.36 | 24,567.00 |
| அலுவலக வழங்கல்கள் | 9,277,535.72 | 4,309,442.61 |
| காணிப் பயன்பாட்டு உரிமையின் காலக்கழிவு | 2,364.00 | 2,364.00 |
| அச்சீடு மற்றும் காகிதாதிகள் | 3,475,693.85 | 2,957,334.71 |
| ஆய்வுகூட வழங்கல்கள் | 1,553,963.55 | 174,837.20 |
| சுற்றாடற் செலவினங்கள் | 93,160.00 | 84,890.00 |
| பெறுமானத்தேய்வு | 49,003,686.17 | 34,431,460.46 |
| உலக வர்த்தக மையத்தின் வாடகை | - | 12,953,040.00 |
| உ.வ. மையத்திற்குச் செலுத்தப்பட்ட மின்சாரம் | - | 559,240.08 |
| மோட்டார் வாகனப் பராமரிப்பு | 14,707,994.39 | 8,675,598.85 |
| எண்ணெயும் எரிபொருளும் | 14,533,242.24 | 8,835,003.24 |
| டயர்களும் டியூப்களும் | 1,990,488.80 | 1,339,256.56 |
| மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமும் காப்புறுதியும் | 642,811.08 | 439,823.62 |
| வாகனத்தரிப்புக் கட்டணங்கள் | 330.00 | - |
| பொதுச் செலவினங்கள் | 382,893.00 | 427,634.73 |
| செயற்திட்டச் செலவினங்கள் | 11,151,491.25 | 7,339,125.64 |
| வங்கிக் கட்டணங்கள் | 2,120,472.56 | 828,776.34 |
| இரத்தினக்கல் சுரங்கவியலாளர்களின் புலமைப்பரிசுச் செலவினங்கள் | 5,679,617.80 | 1,648,500.00 |
| இரத்தினக்கல் காணிப் புனரமைப்பு | 266,300.00 | 3,099,934.00 |
| குறைபாட்டு ஏற்பாடு – சொத்து | - | 475,854.03 |
| | **254,891,259.68** | **179,454,720** |

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை**
**2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள்**

| | 2022 | 2021 |
|---|---|---|
| **31 ஆளணிச் செலவுகள்** | | |
| சம்பளங்களும் படிப்பணமும் | 136,259,807.20 | 136,810,653.41 |
| பதில் படிப்பணங்கள்/ இடர் படிப்பணங்கள் | 491,411.89 | 429,433.00 |
| ஊ.சே.நி. இற்கு உள்ளடங்காத சம்பளங்களும் படிப்பணங்களும் | 18,613,001.98 | 5,237,666.36 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 22,161,386.43 | 22,327,024.31 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 4,434,106.54 | 4,465,404.98 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 4,767,494.17 | 6,639,611.17 |
| லீவு நாட்களில் வேலை செய்தமைக்கான கொடுப்பனவு | 76,942.87 | 48,009.50 |
| லீவு ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 10,741,676.58 | 12,480,231.75 |
| ஊழியர் வீடமைப்புக் கடன்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி | 222,229.56 | 185,459.80 |
| ஊழியர் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் | 36,010,975.50 | 12,276,354.00 |
| பணிக்கொடை | 13,631.55 | 960,313.78 |
| போக்குவரத்து (உள்ளூர்) | 1,806,707.21 | 1,468,483.00 |
| பதவியணியினருக்கான சீருடை | 743,500.00 | 443,450.00 |
| பதவியணி நலன்புரி | 9,955,690.71 | 11,071,484.64 |
| பணியாள் நட்டஈடு | 7,743,886.00 | - |
| மருத்துவக் கட்டணங்கள் | 13,770,793.23 | 13,887,746.23 |
| போக்குவரத்துப் படிப்பணம் | 13,505,000.00 | 13,455,000.00 |
| | **281,318,241.42** | **242,186,326** |

| | | **2022** | **2021** |
|---|---|---|---|
| **32** | **ஊக்குவிப்புச் செலவுகள்** | | |
| | பயணம் - வெளிநாடுகள் | 121,800.00 | 476,710.00 |
| | கண்காட்சிச் செலவினங்கள் - உள்ளூர் | 204,168.60 | - |
| | கண்காட்சிச் செலவினங்கள் - வெளிநாடுகள் | 263,446.62 | 7,746,906.76 |
| | விளம்பரப்படுத்தல் - உள்ளூர் | 3,125,295.75 | 1,400,110.00 |
| | விளம்பரப்படுத்தல் - வெளிநாடுகள் | 706,720.00 | - |
| | **ஊக்குவிப்புச் செலவுகள்** | 2,226,075.95 | 3,279,901.53 |
| | | **6,647,506.92** | **12,903,628** |

| | | | |
|---|---|---|---|
| **33** | **தேறிய நிதி வருமானம்** | | |
| | **வட்டி வருமானம்** | | |
| | நிலையான வைப்புகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | 266,997,815.60 | 128,458,355.97 |
| | பதவியணி கடன் மீதான வட்டி | 550,626.22 | 541,058.42 |
| | | **267,548,441.82** | **128,999,414** |
| | **வட்டிச் செலவினங்கள்** | | |
| | குத்தகைக் கொடுப்பனவு | (58,232.00) | (38,708.00) |
| | மேற்கொள்வதற்கான பொறுப்பு மீதான நிதிக் கிரயம் | | |
| | | **(58,232.00)** | **(38,708)** |
| | | **267,490,209.82** | **128,960,706** |

| | | | **2022** | **2021** |
|---|---|---|---|---|
| **34** | **வருமான வரிச் செலவினங்கள்** | | | |
| | நடைமுறை வரிச் செலவினங்கள் | **(குறிப்பு 34.1)** | 94,670,212.20 | 37,973,065.76 |
| | கடந்த ஆண்டின் (குறை)/ மிகை ஏற்பாட்டுச் சீராக்கம் | | 615,680.00 | (32,355.40) |
| | பிற்போட்ட வரிக் கட்டணம் /(மீட்பு) | **(குறிப்பு 6)** | 2,229,210.00 | (8,112,737.24) |
| | | | **97,515,102.20** | **29,827,973** |

| | | | |
|---|---|---|---|
| **34. 1** | **உற்பத்திப் பொருளின் கணக்கீட்டு இலாபத்தினதும் நடைமுறை வரிச் செலவினத்திற்கும் இடையிலான கணக்கிணக்கம்** | | |
| | **திரண்ட நிதியத்தின் பங்களிப்பை அடுத்து வரிக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம்** | **375,747,708** | **202,023,008** |
| | ஒட்டுமொத்த அனுமதியற்ற விடயங்கள் | 109,547,112.00 | 81,847,206.00 |
| | ஒட்டுமொத்த அனுமதியான விடயங்கள் | (40,235,602.00) | (50,978,748.00) |
| | ஏனைய வளங்களிலிருந்தான வருமானம் | (277,815,989.00) | (146,122,670.00) |
| | **வியாபார மற்றும் வர்த்தகத்திலிருந்தான இலாபம் / (நட்டம்)** | **167,243,229** | **86,768,796** |
| | வரிக்கு உட்பட்ட ஏனைய வருமானம் - வட்டி வருமானம் | 277,215,988.50 | 146,122,669.60 |
| | **மொத்த நியதிச்சட்ட வருமானம** | **444,459,217.50** | **232,891,465.60** |
| | விதிப்பனவுகளுக்கு உட்பட்ட கொடுப்பனவு | (50,000,000.00) | (40,000,000.00) |
| | பயன்படுத்தப்பட்ட வரி இழப்புகள் | | (34,670,358.27) |
| | **மதிப்பிடப்பட்ட வருமானம்/ வரி வருமானம்** | **394,459,218** | **158,221,107** |
| | நியதிச்சட்ட வரி விகிம் 24% படி விதிக்கப்பட்ட வரி | 94,670,212 | 37,973,066 |
| | மொத்த பங்கிலாபத்தின் மீதான வரி | - | - |
| | **ஆண்டிற்கான வழமையான நடவடிக்கைகள் மீதான நடைமுறை வரி** | **94,670,212** | **37,973,066** |

**35. மூலதன மற்றும் ஏனைய கடப்பாடுகள்**

தமுனுவாவத்த கட்டிடம் மற்றும் இரத்தினபுரிக் கட்டிட நிர்மாணிப்பு தொடர்பாகவும் கணனி மென்பொருள் பொதி விருத்தி தொடர்பான இடைக்காலக் கொடுப்பனவுகளுக்காக நடைபெறும் வேலை மீதான செலவினத் தொகையாக ரூபா 10.45 மில்லியன் மேற்கொள்ளப்பட்டு முற்கொடுப்பனவுகளின் கீழ் 60% வேலை முடிவுறுத்தப்பட்டதாக சான்றுறுதிப்படுத்தப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது.

**36. அறிக்கையிடற் திகதிக்குப் பின்னர் நிகழும் சம்பவங்கள்**

ஐந்தொகைத் திகதியின் பின்னர் காட்சிப்படுத்தப்பட்ட இரத்தினக்கற்கள் மீள்பெறுமதியிடப்பட்டுள்ளதுடன் இவற்றின் மீள்பெறுமதியிடப்பட்ட தொகை ரூபா 765,316,000 ஆகும்.

**37. நிகழத்தக்க பொறுப்புகள்**

வழமையான வியாபார நடவடிக்கையின் போது எழும் சட்டக் கோரல்கள் தொடர்பாக அதிகாரசபை நிகழத்தக்க பொறுப்புகளைக் கொண்டுள்ளது. ஓர் ஏற்பாடாக ஏற்பிசைவு செய்யப்பட்டாலன்றி (குறிப்பு 27), இக் கோரல்கள் நடுநிலைத் தன்மையற்றவையெனவும் அவற்றின் தீர்ப்பனவிற்காக வளங்களின் வெளிப்பாய்ச்சல் பின்தங்கியதாகவுமே முகாமைத்துவம் கருதியுள்ளது. இம் மதிப்பீடானது அதிகாரசபையின் நீதிப் பிரிவின் ஆலோசனையுடன் இணங்குவதாகும்.

**38. தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்கள்**

அதிகாரசபையின் தொடர்புடைய தரப்பினரில் இலங்கை திறைசேரி, அரச சார்பான நிறுவனங்கள், அரசுடமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகள் மற்றும் முக்கிய முகாமைத்துவ தரப்பினர் உள்ளடங்குவர். லங்கா ஜெமோலொஜிகல் லபோரட்டரி (பிரைவேட்) லிமிடட் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 126,512,567 தொகை மற்றும் இரத்தினக்கல் ஆபரண ஏற்றுமதியிலிருந்து சேகரிக்கப்பட்ட நிதியங்களில் இருந்தும் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண நிறுவகத்தால் ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

**38.1 முக்கிய முகாமைத்துவ நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்**

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் LKAS.24 "தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களின்" படி தொடர்புடைய தரப்பினரின் முக்கிய முகாமைத்துவ நபர்கள் நிறுவனத்தின் நடவடிக்கைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ திட்டமிடல், வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளிற்குப் பொறுப்புடையவர்களாவர். இதன் படி, பணிப்பாளர் சபை முக்கிய முகாமைத்துவ நபர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

| **முக்கிய முகாமைத்துவ நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறாகும்** | **2022** | **2021** |
|---|---|---|
| ஊதியமும் ஏனைய குறுங்கால ஊழியர் நலன்களும் | - | - |
| பின் உழைப்பு நலன்கள் | - | - |

**38.2 தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்**

அதிகாரசபை மேற்கொள்ளும் முக்கியமான தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களின் விபரம் பின்வருமாறாகும்.

| **தொடர்புடைய தரப்பினர்** | **அறிக்கையிடற் காலப்பகுதிக்கான கொடுக்கல் வாங்கல்களின் தன்மை** | **கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி** | **மீதி முதிர்வு வரை/ (முதிர்விலிருந்து)** |
|---|---|---|---|
| அரசுடமையாக்கப்பட்ட நிறுவனங்கள் | நிலையான வைப்புக்களில் மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடுகள் | 567, 414 ,377.75 | - |
| | நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களிலிருந்தான மீளப்பெறல்கள் | (65,000,000.00) | 502,414,378 |
| | ரீப்போ முதலீடுகள் | - | - |
| | ரீப்போக்களின் மீளப் பெறல்கள் | - | - |
| ஏனைய அரச சார்பு நிறுவனங்கள் | பங்கு முதலீடுகள் | - | - |

මගේ අංකය
எனது இல.
My No. } ஜடபிள்யூஆர்சீ/என்ஜீஜேஏ/01/21 ඔබේ අංකය
உமது இல.
Your No. } දිනය
திகதி
Date } 2023 யூன் 16

தலைவர்

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை

**தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டின் போது நடைமுறை வேலைகளிற்காக பணமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 113,559,640 காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 ஆம் ஆண்டின் போது காசாகச் செலுத்தப்பட்டிருந்த பணிக்கொடைக் கொடுப்பனவுப் பெறுமதியான ரூபா 11,625,870 தொகை தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,995,790 தொகை குறைவாக ரூபா 9,630,080 மாத்திரம் காசு வெளிப்பாய்ச்சலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் பிரகாரம், வரி கணிப்பிடப்பட வேண்டிய போதிலும், 2022 இன் 45 ஆம் இலக்க தேசிய வருமான வரி அதிகாரச்சட்டத்தின் 33(3) ஆம் பந்தியின் கீழ் முதல் 06 மாதங்களுக்காக 24 சதவீதமும் இரண்டாம் 06 மாதங்களுக்காக 30 சதவீதமுமாகக் கருதி வரி கணிப்பிடப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் முழுக் காலப்பகுதிக்குமான வரி வீதம் 24 சதவீதமாகக் கருதப்பட்டு வருமான வரி கணிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக வரிச் செலவினம் ரூபா 11,833,776 ஆல் குறைவாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. மேலும், மேற்குறிப்பிடப்பட்டவாறு வேறான வரி வீதத்தைப் பயன்படுத்தியதன் காரணமாக பிற்போட்ட வரிப் பொறுப்பு ரூபா 6,649,335 ஆல் குறைத்துக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 120 ஆம் பந்தியின் பிரகாரம், பணிக்கொடை தொடர்பான சகல சேவைச் செலவினப் படிவத்தின் படி விபரமான வருமானக் கூற்று அறிக்கையில் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், பணிக்கொடைக்கான ஏற்பாடு கணிப்பிடப்படுகையில் வருடத்திற்கு உரித்தான பணிக்கொடைச் செலவினப் பெறுமதியான ரூபா 1,930,028 தொகையும் வட்டிச் செலவினத் தொகையான ரூபா 5,444,646 உள்ளடங்கலாக மொத்தக் கூட்டுத்தொகையான ரூபா 7,374,674 செலவினமாகவும் வாழ்க்கைக்கால இலாபம் ரூபா 7,361,043 ஏனைய விபரமான வருமானமாகக் பதிவு செய்யப்படாது தேறிய விளைவு ரூபா 13,631 தொகையான பணிக்கொடைச் செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 10 ஆம் பந்தியின் பிரகாரம், பின்னைய செயற்பாட்டின் விளைவாக ஏற்படக்கூடிய கடப்பாடு (Possible Obligation) தொடர்பாக கொடுப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை நிகழத்தக்க பொறுப்பாக கணக்கீட்டு குறிப்புகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந் நிலை கணக்கீட்டுக் குறிப்புகளின் மூலம் வெளிக்காட்டப்படாது நட்டஈடாகச் செலுத்துவதற்கு நேரும் என எதிர்பார்க்கப்படும் தொகை ரூபா 7,700,000 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்களை ஊக்கப்படுத்துவதற்காக அதிகாரசபையால் உலக வர்த்தக மையத்தின் 02 மாடிகள் வாடகையில் எடுக்கப்பட்டு அவற்றின் கடைகளை நடாத்திச்செல்வதற்காக 19 வர்த்தகர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இவர்களில் 03 கடை உரிமையாளர்களிடமிருந்து 2019 வரை கிடைக்கப்பெற வேண்டியிருந்த ரூபா 2,989,815 நிதிக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அதிகாரசபையின் கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம், சொத்துக்களிற்கு உரித்தான சேத நட்டங்கள் இனங்காணப்படுகையில் அச் சொத்துக்களின் மீளாய்வு செய்யப்பட்டு இதற்கு உரித்தான ஒதுக்கப்பட வேண்டிய சேத நட்டம் வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாது ஏனைய சொத்துக்கள், கிடைக்க வேண்டியவைகள், வைப்புகள் மற்றும் முற்பணத்திற்காக முறையே ரூபா 200,000, ரூபா 1,407,972 மற்றும் ரூபா 1,433,947 தொகையான ஒரே பெறுமதியில் ஐந்து ஆண்டு காலத்திற்கும் மேலாக மாற்றமற்ற பெறுமதி சேத நட்டமாக கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது.

(உ) அதிகாரசபையிடம் இருந்த அந்நிய செலாவணியூடாக கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்படும் 03 வைப்புகளின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய மீதியான அ.டொ. 77,378.05 தொகைப் பெறுமதி அன்றைய திகதியில் நிலவிய பரிமாற்றல் பெறுமதிக்கு (ரூபா 362) மதிப்பிடப்பட்டிராததன் காரணமாக ரூபா 11,650,248 ஆல் காசு மற்றும் காசிற்குச் சமமானவையின் பெறுமதி குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒப்பந்தங்களின் பிடித்து வைத்தல் மீதி ரூபா 22,611,038 ஆகக் காணப்பட்டதுடன் அம் மீதியில் 2009 சனவரி 01 ஆம் திகதிக்கு முன்பிருந்தே நிலவிவரும் ரூபா 2,568,873 தொகையான பெறுமதி உள்ளடங்கியிருந்த போதிலும், அப் பெறுமதிக்கு உரித்தான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) தோட்டக் கம்பனி ஒன்றிற்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 22,306,195 தொகைக்காக அதிகாரசபையால் ரூபா 22,090,642 தொகை நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்ருந்ததுடன் அத் தொகை முறையே பல்வேறு கடன்கொடுனர்களின் கீழும் பல்வேறு வைப்புகளின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வெளித்தரப்பினர்களால் காணிப் பிணக்குகள் தீர்க்கப்படும் வரையில் அதிகாரசபையில் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 116,136,877 தொகை கிடைக்கப்பெற்ற வைப்புகள் மற்றும் முற்பணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 கூட்டுத்தாபனத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுபவை அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்களாகக் கருதப்படும். இவ் ஏனைய தகவல்களுக்காக முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை தொடர்பாக எவ்வகையிலும் சான்றுப்படுத்தலையோ அல்லது அபிப்பிராயத்தையோ வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை நான் வாசிக்கையில் அதில் பொருண்மையான அளவில் பிழையாகக் காட்டப்பட்டுள்ளது என முடிவுக்குவந்தால் சரிசெய்வதற்காக நிருவகிக்கின்ற தரப்பினர்களுக்கு இவ்விடயங்களை நான் தெரியப்படுத்தல் வேண்டும். இன்னும் சரிசெய்யப்படாத பொருண்மையான பிழையாகக் காட்டுதல்கள் இருக்குமாயிருந்தால் அவற்றை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகாரசபை தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதிகாரசபையின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.5 கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக்

காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக அதிகாரசபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் அதிகாரச் சபையின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை அதிகாரசபை பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கையின் அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பிரிவில் (ஈ), (உ), (ஊ) இல் காண்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் தவிர்ந்த முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபையின் நிர்வாக சபையின் எவரேனும் அங்கத்தவர்கள் எவருக்கும் அதிகாரசபை சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்துஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அதிகாரசபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

| | சட்டங்கள் / பணிப்புரைக்கான தொடர்பு | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிப் பிரமாணத்தின் நிதிப் பிரமாணம் 486 | காசோலைகள் மறுக்கப்படுகையில் இதற்கான பெறுமதி கூடிய விரைவில் பணமாக அறவிடப்பட வேண்டிய போதிலும் 09 ஆண்டுகளுக்கு மேலான ரூபா 178,840 பெமதியான 02 காசோலைகள் தொடர்பாக பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாது ரூபா 26,890,229 தொகை நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | 2012 சனவரி 05 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. 01/2012 | நிர்மாணிப்பு வேலை ஒப்பந்தங்கள் மாத்திரம் சமுர்தி மக்கள் சார் அமைப்பு/ சமுர்தி பிராந்திய அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட முடியுமான போதிலும் இரத்தினக்கல் செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு அவ் அமைப்புகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்க வில்லை. எனினும், அதிகாரசபையால் 4 இரத்தினக்கல் செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சமுர்தி மக்கள் சார் அமைப்புடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2021.11.16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதியாண்டு முடிவுற்றதை அடுத்துள்ள 60 நாட்களுக்குள் வருடாந்த அறிக்கையின் வரைவறிக்கையுடன் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தால் வருடாந்த அறிக்கையின் வரைவறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் படி, பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த அதிகாரசபையின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.

| அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகள் | |
|---|---|
| (அ) 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டம் | |
| (i) 14 (க) பிரிவு | இரத்தினக்கல் கைத்தொழில் மற்றும் ஆபரணக் கைத்தொழிலில் தொழில்புரியும் தரப்பினரின் வேலை வாய்ப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், குறிப்பாக அத் தரப்பினரின் உயிரையும் உடலையும் விபத்துக்களில் இருந்து பாதுகாப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகளை நெறிப்படுத்தி கட்டுப்படுத்தும் நோக்கில் இரத்தினக்கல் அகழ்விற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குகையில் அறவிடப்படும் தொகையில் ரூபா 500 இரத்தினக்கல் அகழ்விற்கான நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இந் நிதியத்தின் மீதி ரூபா 34,807,024 ஆகக் காணப்பட்டதுடன் இந் நிதியத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கம் எய்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 15(1) ஆம் பிரிவு | இப் பிரிவின் படி, இலங்கையில் இரத்தினக்கல் கைத்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குவது தொடர்பான பொறுப்புவாய்ந்த ஒரே அதிகாரம் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைக்கே ஆனமையால் இரத்தினக்கல் கைத்தொழில் விடயத்திற்கு உரித்தான முக்கிய ஒழுங்கமைப்பு அதிகாரம் மூன்றாம் தரப்பினருடன் நேரடியாக இரத்தினக்கல் அகழ்வுச் செயற்திட்டங்களில் ஈடுபடுவது அதிகாரச்சட்டத்திற்கு முரணானது என சட்டமா அதிபதி திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அத்தகைய 04 இரத்தினக்கல் அகழ்வுச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) | 15 (2) ஆம் பிரிவு | இரத்தினக்கல் பரீட்சித்தல் மற்றும் சான்றிதழ் வழங்குதலிற்காக கொண்டு நடாத்தப்படும் தனியார் ஆய்வுகூடங்களைப் பதிவு செய்வதற்காகவும் ஒழுங்கமைப்பதற்காகவும் நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 17 (1) ஆம் பிரிவு | எவரேனும் ஓர் நபரால் எந்த ஒரு இடத்திலும் ஆபரணக் கைத்தொழில் கொண்டு நடாத்தப்படுகையில், அக் கைத்தொழில் இயங்கும் இடத்தை அதிகாரசபையில் பதிவு செய்ய வேண்டிய போதிலும், கைத்தொழிலை மேற்கொள்ளும் தரப்பினர் பதிவு செய்திருக்கின்றனரா என்பது குறித்து முறையான ஒழுங்கமைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக காலஎல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என.

**03. ஏனைய விடயங்கள்**

(அ) அதிகாரசபையால் ரூபா 19 மில்லியன் கிரயத்தில் அதிகாரசபையின் பயன்பாட்டிற்காக மென்பொருள் முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்படுவதற்காக 2016 ஆம் ஆண்டின் போது மென்பொருள் வழங்கல் நிறுவகம் ஒன்றுடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 10,621,000 செலுத்தப்பட்டிருந்தது. இதன் கொள்வனவு நடைமுறை ஆரம்பிக்கப்பட்டு 06 வருடங்களுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் இது பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு இறைவரி திணைக்களச் சுற்றறிக்கையின் இல. எஸ்ஈசீ/2020/04 இன் தொடர் இல (சீ) 2 இன் பிரகாரம், ஏதேனும் ஓர் மாதத்தில் சேகரிக்கப்படும் பிடித்துவைத்தல் வரி அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரை அதிகாரசபை இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏலவிற்பனையின் போது குறித்த ஏலவிற்பனைத் தொகையில் இருந்து அறவிடப்பட்ட 2.5 சதவீதமான பிடித்துவைத்தல் வரித்தொகையான ரூபா 483,813,173 தொகையை 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அனுப்பிவைத்திருக்கவில்லை.

(இ) கிலோகிராம் 510 நிறைகொண்ட "Rough Sapphire Cluster" இரத்தினக்கல் பாறை 2021 ஒக்டோபர் 27 ஆம் திகதி உரிமையாளரால் தயாரிக்கப்பட்ட பற்றுச்சீட்டின் படி, அ.டொ. 10,000,000 இற்கு அதாவது ரூபா 2,030,600,997 இற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. இது அதிகாரசபைப் பணிப்பாளர் (மதிப்பாளர்/ இரத்தின நிபுணரால் விலையின் நியாயத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் பாறை மதிப்பிடப்பட்ட உறுதிப்பத்திரம் பெறப்படுவதற்காக சுவிட்ஸர்லாந்து கெப்லின் ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த அவ் இரத்தினக்கல் பாறை 443 தினங்களுக்குப் பின்னர் இந் நாட்டிற்குக் கொண்டுவருகையில் 2020 மார்ச் 02 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் 13.6 ஆம் பந்தியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய இந்தோனேசியாவின் முழுமையான கப்பலில் ஏற்றப்பட்ட பெறுமதியின் 1 சதவீதமான அ.டொ. 10,000,000 * 1% = 100,000 இற்குச் சமமான ரூபா 37,100,000 தொகை (2023 சனவரி 13 ஆம் திகதி அ.டொ. 1 = ரூபா 371 ) அனுமதிப்பத்திர உரிமம் பெற்றவரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரத்தினபுரி இரத்தினக்கல் அருங்காட்சியக நிர்மாணிப்பிற்காகவும் நாலந்த பூங்கா அபிவிருத்திக்காகவும் ரூபா 45 மில்லியன் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 250,000 தொகை செலுத்தி தர அறிக்கை மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் அவ்வாறு செலவிடப்பட்ட தொகை விளைவற்ற செலவினமாகியிருந்தது.

(உ) இரத்தினக்கல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகையில் அகழப்படும் இரத்தினக்கல் சுரங்கம் மீள நிரப்பப்பட்டு மீளமைக்கப்படுவதற்காக சாதாரண சுரங்கத்திற்கு ரூபா 4,500 முதல் ரூபா 9,000 தொகையும் இயந்திர சுரங்கத்திற்காக 3,000 முதல் 4,000 சதுர அடி வரையான அளவிற்காக ரூபா 600,000 முதல் ரூபா 5,000,000 ஆக விசேட பாதுகாப்பு பிணையும் சுரங்கவியலாளர்களிடம் இருந்து அறவிடப்படுவதுடன் அச் சுரங்கங்களை மீளமைத்ததன் பின்னர் அப் பிணை வைப்புகள் மீள அவர்களுக்கு வழங்கப்படும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட ரூபா 993,253,918 கூட்டுத்தொகை சுரங்க அகழ்வாளர்களால் மீள பெறப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக இவ் இரத்தினக்கல் சுரங்கக் குளிகள் நிரப்பப்பட்டு குறித்த நிலம் முறையாக மீளமைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(ஊ) உலக வர்த்தக மையத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்களுக்கு கடைகளை வழங்குவதற்காக அதிகாரசபைக்கும் உலக வர்த்தக மையக் கம்பனிக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டிருந்த குத்தகை உடன்படிக்கை 2021 ஒக்டோபர் 31 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்தது. இதன் படி, அதிகாரசபையால் 2004 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு பிணை வைப்பு ரூபா 16,368,300 தொகை கணக்காய்வுத் திகதியான 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) திறைசேரியின் அங்கீகாரம் இன்றி ஆரம்பிக்கப்பட்டிருந்த இரத்தினக்கல் பரிசூதிய நிதியத்திற்காக அத்துமீறி மேற்கொள்ளப்படும் இரத்தினக்கல் அகழ்விற்காக அதிகாரசபையால் விதிக்கப்படும் தண்டப்பணம் மற்றும் அரசுடமையாக்கப்படும் பொருட்கள் மற்றும் இல்லங்களை ஏலவிற்பனை செய்கையில் பெறப்படும் பணம் மற்றும் நீதிமன்றத்தால் விதிக்கப்படும் தண்டப்பணம் தவிர்ந்த ஏனைய சேகரிக்கப்படும் தண்டப்பணத்தில் 35 சதவீதம் சுற்றிவளைக்கும் அணிக்கும் 5 சதவீதம் சுற்றிவளைக்கும் அலுவலகத்திற்கும் 10 சதவீதம் அதிகாரசபையின் சகல உத்தியோகத்தர்களுக்கும் வழங்கி மிகுதித் தொகையான 50 சதவீதம் அதிகாரசபை வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் இந் நிதியத்தின் மீதி ரூபா 45,226,589 ஆகக் காணப்பட்டது.

(ஏ) 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் ஆபரணங்கள் அதிகாரசபையின் அதிகாரச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அது காலக்கிரமமான முறையில் திருத்தப்படுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி